பள்ளிக்
கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல்
மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

# கனவு ஆசிரியர்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

01 ஜூன் 2024
கனவு 2 இதழ் 24
விலை : ரூ.40/-
சென்னை

KANAVU AASIRIYAR
Monthly magazine · 01 - JUNE 2024
Kanavu 2 · Issue 24 · Price: Rs. 40/- · Chennai



## ஆசிரியர்களின் கல்விச் சுற்றுலா



## ஆடல் பாடலுடன் பழப்பு

கிரேஸ் ஆனந்தி

## விளையாட்டுக் கல்வியே விருப்பம்

பாக்யலஷ்மி



புதிய தொடர்

## விடை தேடும் வினாக்கள்

# புதிய சாளரத்தைத் திறக்கும் நூல்

நம்மிடம் யாராவது உனக்குத் தெரிந்த பறவைகளின் பெயர்களைச் சொல்லுங்கள் என்று கேட்டால், நாம் உடனடியாக சில பறவைகளின் பெயர்களைச் செல்லுவோம். உண்மையில் இந்த உலகில் எத்தனை வகையான பறவைகள் உள்ளன என்று கேட்டால் நம்மில் பலருக்கும் தெரியாது. அவற்றின் எண்ணிக்கையை அறிந்து கொண்டால் நமக்கு வியப்புதான் மேலிடும். ஆம்! சுமார் பத்தாயிரம் வகையான பறவைகள் உள்ளதாக இந்நூலில் அறிந்துகொள்ள முடிகிறது.

இப்படிப் பல வியப்பான இயற்கை பற்றிய அறிவியல் உண்மைகளை, சின்னச் சின்னதாய் தொகுத்துக் கொடுத்துள்ளார் நூலாசிரியர். கூடவே இயற்கை குறித்த பல ஆளுமைகளின் சிந்தனைகளையும் தொகுத்துள்ளார். ஆயிரத்திற்கும் அதிகமான செய்திகளை உள்ளடக்கிய இந்த நூல் சிறந்த வடிவமைப்பில் வந்துள்ளது. கடலைச் சுருக்கி கடுகுக்குள் வைத்தது போல பல செய்திகளும் பிரமாதமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.




இந்த நூலில் இருந்து எந்தவொரு செய்தியை நாம் படித்தாலும் 'அட!' போட வைக்கிறது. சுருங்கச் சொல்லப்பட்ட அந்தச் செய்தியைத் தேடி நாம் பயணப்பட்டால் அந்தச் செய்தியின் பின்னால் விரிகின்ற உலகம் மிகப் பெரியதாக இருக்கிறது. இப்படி ஒவ்வொரு செய்தியின் பின்னாலும் நம்மால் பயணிக்க முடியும். இயற்கையைப் பற்றிய நல்ல புரிதலைத் தரக்கூடிய மிக நல்ல நூல்.

ஆறு பக்கங்களில் எழுதப்பட்டுள்ள இந்தப் பிரபஞ்சம் தோன்றியதில் இருந்து நவீன காலம் வரையான சுருக்க வரலாறு நமக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்துகிறது. இந்த நூலை உருவாக்க நூல் ஆசிரியர் எவ்வளவு உழைத்திருக்கிறார் என்பதை இதை வாசிக்கும் எவரும் உணர்ந்துகொள்வர். தமிழில் கலைக் களஞ்சியம், அகராதி போன்றவற்றைப் பார்த்திருப்போம். இயற்கைச் செய்திகளை இப்படிச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஒரு நூல் இது.

இயற்கையை நேசிக்கும் மனிதர்கள் மட்டுமல்ல, குழந்தைகளை நேசிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் இந்த நூலை வாங்கிப் படிக்க வேண்டும். படித்து இதில் உள்ள செய்திகளை தினம் ஒன்றாக எடுத்துச் சொன்னால் மிகவும் சிறந்த அனுபவமாக அமையும்.

– கனி

| | | |
|---|---|---|
| நூல் | : | இயற்கை – செய்திகள், சிந்தனைகள் |
| ஆசிரியர் | : | ச.முகமது அலி |
| வெளியீடு | : | இயற்கை வரலாறு அறக்கட்டளை, பொள்ளாச்சி, பேச: 04259-253252, |
| விலை | : | ரூ. 200 |

# உள்ளடக்கம்





8 விடை தேடும் **வினாக்கள்**

42



**மகாமசானம்**

சிறுகதை - புதுமைப்பித்தன்

### சமூகம்

32 ஆடல் பாடலுடன் பாடம் நடத்துவதே சிறப்பு – ஆசிரியர் கிரேஸ் ஆனந்தி

36 அழகிய கலைப் பொருள்களாகும் பழைய காலணிகள்

### கல்வி

04 ஆசிரியர்களின் டேராடூன் கல்விச் சுற்றுலா

12 பாகிஸ்தான் பூங்காவில் இயங்கும் பள்ளி!

14 வரப்பெற்றோம் – ஆசிரியர் நூல்கள்

16 மீண்டெழுந்த ஆர்மீனியாவின் கல்வி

### வாழ்க்கை

18 “குடும்பமாகச் சேர்ந்து படிக்கிறோம்!” – ஆசிரியர் தெ. சித்ரா

22 விளையாட்டு முறை கல்வியே குழந்தைகளின் விருப்பம் – ஆசிரியர் க.பாக்யலஷ்மி

28 “பள்ளிகளே என்னை வளர்த்தன!” – பேரா. சாலமன் பாப்பையா

### நலம்

38 கடைப்பிடிக்க வேண்டிய கோடை கால உணவு முறைகள் – மருத்துவர் எஸ்.சந்திரசேகர்

### பொது

48 சினிமா – சாதித்த சிறப்புக் குழந்தைகள்!

50 கவிதை – மீப்பெரு மௌனச் சொல்

52 செயலி – விண்வெளி வரைபடம்!



கனவு ஆசிரியர்

Kanavu Aasiriyar Monthly

- 01 ஜூன் 2024
- கனவு 2 இதழ் 24
- 01 JUNE 2024
- Kanavu 2 Issue 24

படைப்புகள் அனுப்ப : kanavuaasiriyar@tnschools.gov.in

சந்தா குறித்த தகவல்களுக்கு : magazine.subscription@tnschools.gov.in

● பதிப்பாளர் / ஆசிரியர் : செ. அமுதவல்லி ● அச்சிட்டோர்: பா. ராஜ்குமார் ● அச்சகம்: ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட், 69–71/A, சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம் – 600 124. ● பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, எண். 68, கல்லூரிச்சாலை, சென்னை – 600 006. மின்னஞ்சல்: kanavuaasiriyar@tnschools.gov.in

# ஆசிரியர்களின் டேராடூன் கல்விச் சுற்றுலா



2023–24ஆம் கல்வியாண்டில் நடந்த 'கனவு ஆசிரியர்' தேர்வில் வெற்றி பெற்ற 325 விருதாளர்களை ஊக்குவிக்கும் விதமாக ஐந்து நாள்கள் தேசியக் கல்விச் சுற்றுலாவுக்குத் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உத்ரகாண்ட் மாநிலத் தலைநகர் டேராடூனுக்கு சென்னையில் இருந்து விமானம் வழியாக ஏப்ரல் 26 முதல் 30 வரை ஒரு குழுவும், ஏப்ரல் 27 முதல் மே 1 வரை இன்னொரு குழுவும் என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அறிவிப்பு வந்தது.

நாங்கள் இருவரும் முதல் குழுவில் வெவ்வேறு விமானங்களில் பயணிக்க உள்ளோம் என்பதை உறுதி செய்து கொண்டோம். டேராடூன் என்று சொன்னவுடன் அங்கு தட்பவெப்ப நிலை எப்படியிருக்கும்? வெயிலா, குளிரா? எந்த மாதிரியான உணவு கிடைக்கும் என்ற சந்தேகங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், புதிய இடங்களைச் சுற்றிப் பார்க்கப் போறோம், அதன் வழியாகப் பல தகவல்களைத் தெரிந்துகொள்ளப் போகிறோம் என்கிற ஆவலுடன் பயணத்திற்குத் தயாரானோம்.

## முதல் பயணம்

ஏப்ரல் 24 காலையில் சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் சென்றோம். முதன்முதலாக விமான நிலையத்திற்குச் செல்வதால் வியப்பாக இருந்தது.



சென்னை உள்நாட்டு முனையத்தைச் சென்றடைந்தோம். எங்களுக்கான விமானப் பயணத்திற்கான அனுமதிச் சீட்டும் 'கனவு ஆசிரியர்' அடையாளத் தொப்பியும் கொடுக்கப்பட்டது. எல்லாவித ஏற்பாடுகளும் சரியாகச் செய்திருந்ததோடு அரசு சார்பில் எங்களை வழியனுப்பியும் வைத்தனர்.

விமானத்தில் சன்னல் இருக்கையில் அமர்ந்துகொண்டு பயணத்தை இரசித்தோம். டெல்லியைச் சென்றடைந்த பின்னர் மற்றொரு விமானத்தில் டேராடூனுக்குச் சென்றோம். டேராடூனில் இறங்கியதும் எங்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். ஹரித்துவாரில் எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்குச் சென்றோம். அங்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு வந்திருந்த மற்ற ஆசிரிய நண்பர்களுடன் பேசி, பழகி இரவு உணவை உண்டு களித்தோம்.

அடுத்த நாள் (27.04.2024) காலையில் ஆற்றில் இரப்பர் படகில் (River rafting) சுமார் 16 கி.மீ. தூரம் ஐந்து நிலையிலான சவால்கள் நிறைந்த சவாரி செய்தோம். அதன் பிறகு, டேராடூன் ராஜாஜி வனவிலங்குச் சரணாலயத்திற்குச் சென்றோம். சரணாலயத்தில் இயற்கையாகவே அமைந்திருந்த ஓடைகள், குளங்கள் ஆகியவற்றில் நீர் அருந்த வந்த மிருகங்களை கண்டு மகிழ்ந்தோம்.



அங்கு பசுமைமாறாக் காடுகள், இலையுதிர்க் காடுகள் ஆகிய இரண்டையும் ஒருசேரக் கண்டோம். ஆம்! சரணாலயத்தின் உள்ளே செல்லச் செல்ல பசுமைமாறாக் காடுகளையும் சரணாலயத்தின் வெளியே இலையுதிர்க் காடுகளையும் கண்டோம்.

## அருங்காட்சியகங்கள்

மறுநாள் (28.04.2024) டேராடூனில் உள்ள வன ஆராய்ச்சி நிறுவனத்துக்குச் (FRI) சென்றோம். இது பழமையான நிறுவனங்களில் ஒன்றாகும். வெளிப்புறத் தோற்றத்தில் இமயமலையைக் காணும் வகையில் அமைந்துள்ளது. இந்த நிறுவனத்தின் முதன்மைக் கட்டடம் ஒரு கண்கவர் மாளிகையாகும். இது கிரேக்க, ரோமன் மற்றும் காலனித்துவ கட்டடக் கலை பாணிகளை ஒருங்கே கொண்ட 2.5 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்தக் கட்டடம் ஒரு காலத்தில், கின்னஸ் புத்தகத்தில், உலகின் மிகப்பெரிய, முற்றிலும் செங்கல் கட்டமைப்பினைக் கொண்ட கட்டடம் என்ற பெயரினைப் பெற்றிருந்ததாம்.


நோயியல் அருங்காட்சியகம், காடு வளர்ப்பு அருங்காட்சியகம், மர அருங்காட்சியகம், மரம் அல்லாத வனப்பொருள், பூச்சியியல் அருங்காட்சியகம் உட்பட இங்கு ஆறு பிரிவுகளின் கீழ் அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன.

## மண்டல அறிவியல் ஆராய்ச்சி மையம்

வன ஆராய்ச்சி மையத்தின் ஆறு அருங்காட்சியகங்களையும் சுற்றிப் பார்த்த பின்னர் இந்தியன் மிலிட்டரி அகாடமி (Indian Military Academy) வழியாக டேராடூனில் அமைந்துள்ள மண்டல அறிவியல் ஆராய்ச்சி மையத்தினைச் சென்றடைந்தோம். இயற்பியல் முதல், ஏ.ஐ. தொழில்நுட்பம் வரை அனைத்து அறிவியல் வளர்ச்சிகள் குறித்தும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மதிய உணவை முடித்துவிட்டு ராபர்ஸ் கேவ் எனப்படும் குகைப் பகுதிக்குள் சென்றோம்.

## கொள்ளையர்கள் குகை


டேராடூனிலிருந்து 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ராபர்ஸ் கேவ் எனப்படும் கொள்ளையர்கள் குகை. பல ஆண்டுகளுக்கு முன் கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்த பணத்தைப் பதுக்கி வைக்க இந்த இடத்தைப் பயன்படுத்தினார்களாம். மிகக் குறுகலான பாதை வழியாக 2 கி.மீ. நடை











பயணத்துக்குப் பிறகு இந்தக் குகையின் நுழைவாயிலைச் சென்றடைந்தோம்.

அடுத்த நாள் (29.04.2024) முசோரி மலையை நோக்கிச் சென்றோம். ரோப் கார் வழியாகக் கீழேயுள்ள அருவியை இரசித்துக்கொண்டே நீர் மின்சக்தியின் வாயிலாக மின்சாரம் தயாரிக்கும் இடத்தை அடைந்தோம். அங்குள்ள கேளிக்கை விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தோம். கடல் மட்டத்திலிருந்து சுமார் 6 ஆயிரம் மீட்டர் உயரத்தில் "மலைகளின் ராணி" எனப்படும் முசோரி அமைந்துள்ளது. நண்பகல் நேரத்திலும் குளிரை உணரமுடிந்தது. வரும் வழியில் 1843ஆம் ஆண்டு நிறுவப்பட்ட டேராடூனின் மிகப் பழமையான முசோரி நூலகத்தையும் பார்வையிட்டோம்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளுக்குப் பயிற்சி அளிக்கும் இடமான LBSNAAவிற்குச் (Lal Bahadur Shastri National Academy of Administration) சென்றது மிகவும் மகிழ்ச்சி அளித்தது. உள்ளே செல்ல அனுமதியில்லாததால் வெளியிலிருந்து கண்டு வியந்தோம். அதன்பிறகு அதன் அருகே உள்ள நூலகத்தைப் பார்வையிட்டோம். அங்கிருந்து வரும் வழியில் இந்தோ திபேதியன் காவல் படை அகாதெமியைப் பார்த்தோம்.

கல்விச் சுற்றுலாவின் இறுதி நாள் (30.4.2024) அன்று காலையில் நாங்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து பத்து நிமிடப் பயணமாக டேராடூன் கிளமெண்ட் டவுனில் உள்ள ஆசிய புகழ்பெற்ற திபெத்திய நினைவுச் சின்னமான 220 அடி உயரமுள்ள புத்த மடாலயத்திற்குச் சென்றோம். அங்கே புத்தரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஓவியங்கள் தங்க நிறத்தில் வரைந்து வைக்கப்பட்டிருந்தது கண்கொள்ளா காட்சி.

## வாழ்த்து தெரிவித்த விமானி

டேராடூனில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும், நமது கனவு ஆசிரியர்களின் திறமைகளை வெளிக்கொணரும் சில நிகழ்வுகளும் நடைபெற்றன. அன்றைய மதிய உணவை முடித்த பின்னர், அவரவர் விமானத்திற்கான நேரங்களுக்கு ஏற்றபடி டேராடூனில் கண்டுகளித்த இடங்களைப் பற்றியும், தெரிந்துகொண்ட புதுமையான செய்திகளையும் மனதில் அசை போட்டுக்கொண்டே பயணித்தோம். டேராடூனிலிருந்து டெல்லி வழியாகச் சென்னையை நோக்கி வரும்போது நள்ளிரவு 12 மணிக்கு விமானியிடமிருந்து ஒலிபெருக்கியில் வாழ்த்துச் செய்தி தெரிவிக்கப்பட்டது. மகிழ்ச்சியில் மூழ்கினோம். சென்னையை வந்தடைந்ததும் விமானியும் அவரது குழுவினரும் இணைந்து எங்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இதனால் நாம் இன்னுமின்னும் பெரிதாகச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.


கனவு ஆசிரியர் விருது வழங்கும் விழாவின்போது தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையால் ஆசிரியர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக 'கனவு ஆசிரியர் விருது' என்ற பாடல் ஒலிக்கப்பட்டது. இந்தக் கல்விச் சுற்றுலாவின் வாயிலாக அதை நிரூபித்துக் காட்டியுள்ளது பள்ளிக் கல்வித் துறை.

இந்தக் கல்விச் சுற்றுலா எங்களுக்குப் பெரும் புத்துணர்ச்சியைத் தந்ததோடு, மாணவர்களுக்குப் பரந்துபட்ட கல்வியை வழங்க வேண்டிய பொறுப்பையும் தந்துள்ளது.

– அ.வெ.மனோ, இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
முண்டாசுப்புறவடை, நல்லம்பள்ளி ஒன்றியம், தருமபுரி

– மூ. இராமலெட்சுமி, இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, கொன்னப்பட்டி,
கொட்டாம்பட்டி ஒன்றியம், மதுரை

புதிய தொடர்



# விடை தேடும் வினாக்கள்



-ஜி. ராஜேந்திரன்

"வகுப்பறைக்குள் சத்தம் போடாதே"

"[illegible]"

[illegible]

இப்படிப் பல வகைகளில் வகுப்பறையில் அமைதியைக் கொண்டுவருவார்கள் ஆசிரியர்கள். அந்த மௌனத்தில் ஆசிரியர் பேசத் தொடங்குகிறார். புதிய செய்திகளைக் கற்றுக்கொள்ளும் ஆவலில் மாணவர்களின் காதுகள் கூர் தீட்டப்பட்டு காத்திருக்கின்றன.

ஒரு பாடத்தை அனைத்து மாணவர்களுக்கும் சேர்த்தே கற்பிக்கிறார் ஆசிரியர். ஆனால், அப்பாடம் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே வகையில் சென்று சேர்கிறதா? நிச்சயமாக இல்லை. முழுமையாகச் சேராத மாணவர்களை எப்படி இனம் காண்பது? அவர்களுக்கும் அப்பாடத்தை எப்படிக் கடத்துவது? இதைச் சிக்கலாக எண்ணாமல் ஒரு புதிய தடத்தைத் தேடுவதாக எப்படி மாற்றிக்கொள்வது? பேசுவோம்.

வகுப்பறையில் கற்பித்தலில் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்துகொண்டே இருக்கிறது. ஒரு பாடத்தை ஓர் ஆசிரியர் சிறந்த முறையில் கற்பிக்கலாம். அதே பாடத்தை மற்றொரு ஆசிரியர் முற்றிலும் வேறுபட்ட உத்தியைப் பயன்படுத்திக் கற்பிக்கலாம். சதுரங்கப் பலகையில் காய் நகர்த்துவதும் குழந்தைகள் முன் ஒரு பாடத்தை நடத்துவதும் ஒன்றுபோலத்தான்.

ஒரு நதியில் இரண்டு முறை இறங்க முடியாது என்று சொல்வதைப் போல ஒவ்வோர் ஆண்டும் குழந்தைகள் மாறுவார்கள். அவர்கள் வேறுபட்ட அனுபவங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். புதிய துணைக்கருவிகளைப் பயன்படுத்தலாம். கற்பிக்கும்

உத்திகளையும் மாற்றலாம். முன்வருடம் கற்பித்தபோது நமக்குச் சில அனுபவங்கள் கிடைத்திருக்கும். அந்த அனுபவங்களிலிருந்து சில கருத்துகளை நாம் புரிந்துகொண்டிருப்போம். அப்புரிதல் நம் செயல்களில் மாற்றங்கள் ஏற்பட உதவுகிறது.

## புரிதலின் அளவும் நம் நடவடிக்கைகளும்

இப்போது நாம், ஒருவருடைய புரிதலின் அளவு என்பது அவரின் நடவடிக்கைகளில் எப்படி தாக்கம் செலுத்துகிறது என்று பார்ப்போம்.

ஒரு குழந்தை அழகாக எழுதினால் அக்குழந்தை நன்றாகப் படிக்கும் என்று ஓர் ஆசிரியர் புரிந்து வைத்திருக்கிறார், அல்லது நம்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் தம் வகுப்பில் எப்படி நடந்துகொள்வார்?

- குறிப்பேடுகளை மிகக் கவனம் எடுத்துத் திருத்துவார்.
- அடிக்கடி குழந்தைகளுக்கு எழுத்து வேலை கொடுப்பார்.
- அவர் கரும்பலகையில் எழுதும்போது நேரம் எடுத்து, கவனம் எடுத்து எழுதுவார்.
- ஓர் எழுத்தின் வடிவம் மாறுபட்டிருந்தால் பலமுறை எழுதும்படி குழந்தைகளை வற்புறுத்துவார்.
- தன் வகுப்புக் குழந்தைகளின் அழகான கையெழுத்தைப் பற்றிப் பிற ஆசிரியர்களிடம் பெருமையோடு பேசுவார்.

இன்னொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.

கல்வி என்பது ஆசிரியர் சொல்வதை அப்படியே தவறில்லாமல் நினைவுபடுத்திச் சொல்வது, எழுதுவது என்று ஓர் ஆசிரியர் புரிந்துவைத்திருந்தால் அவருடைய செயல்கள் எப்படி இருக்கும்?

- ஆசிரியர் ஒரு கருத்தை பலமுறை கூறுவார்.
- குழந்தைகளையும் பலமுறை கூறச் சொல்வார்.
- முக்கியம் என்று நினைக்கும் பகுதியைப் பலமுறை எழுதச் சொல்வார்.
- ஒரு கருத்தை நினைவில் வைத்துக்கொள்வதற்கான குறுக்கு வழிகளைக் கண்டுபிடிப்பார். (உதாரணத்திற்கு எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8848 மீட்டர் என்பதை எட்டு எட்டா வைத்தால் நாலு எட்டில் சிகரத்தை அடையலாம் என்று சொல்வது போல)
- அக்கருத்தைப் பற்றிக் குழந்தைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதெல்லாம் உயர் வகுப்பில் தெரிந்துகொள்வாய் என்று பதிலளிப்பார்.

**ஜி. ராஜேந்திரன்**


கல்விப் பணியில் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயற்பட்டு வருபவர். கேரளாவில் தமிழ்ப் பாடங்கள் உருவாக்கத்தில் முதன்மைப் பங்காற்றியவர். கோயம்புத்தூரில் Orius learning initiatives எனும் நிறுவனத்தில் இயக்குநராக உள்ளார். மாநிலக் கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்து கற்பித்தலை இனிமையாக்கும் பயிற்சியை ஆசிரியர்களுக்கு அளித்து வருகிறார்.

பெரியவர்கள் சொல்லிக் கொடுத்தால் மட்டும்தான் குழந்தைகளால் கற்றுக்கொள்ள முடியும். மதிப்பெண்தான் வாழ்வின் பயணத்தை முடிவு செய்கிறது. வேலை கிடைத்துவிட்டால் வாழ்க்கையின் வெற்றி உறுதிப்படுகிறது போன்ற பல கருத்துகளைப் பல அளவுகளில் நாம் புரிந்து வைத்திருக்கிறோம். அதனால் நம் நடவடிக்கைகள், நம் எதிர்பார்ப்புகள் போன்றவை வேறுபடுகின்றன. இப்புரிதலின் ஆழம் கூடும்போது, புரிதல் விரிவடையும்போது நம் செயல்களும் மாறுபடலாம். அதற்கான முயற்சியே இக்கட்டுரைத் தொடர். அப்படி மாறும்போது நம் வகுப்பறையில் கற்றல் மேம்படும். நம் உழைப்பின் பலன் கூடும். குழந்தைகள் வகுப்பறையை விரும்புவார்கள். நமக்கு மனநிறைவும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

## தற்போதைய பிரச்சினைகள்

வகுப்பறையில் நடக்கும் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை மிகக் கூர்மையாகக் கவனிக்கும் ஆசிரியர் மனஅழுத்தத்திற்கு ஆளாவது உறுதி.

பலமுறை சொல்லிக் கொடுத்தும், பலமுறை சொல்ல வைத்தும் அவற்றை அடுத்த நாள் கேட்டால் மாணவர்கள் மறந்துவிடுகிறார்கள். பாடம் நடத்துவதைக் கவனிக்காமல் தங்களுக்குள் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் குழந்தைகள் நேரம் கடத்துகிறார்கள். பாடத்தை வாசித்து வரச் சொன்னால் வாசிக்காமல் வருகிறார்கள். பெற்றோர்களோ குழந்தைகளுக்கு அதிக எழுத்து வேலை கொடுக்கச் சொல்கிறார்கள். அடிக்கடி தேர்வு நடத்த





வற்புறுத்துகிறார்கள். இந்த நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் நாம் குழம்பிப் போகிறோம்.

மேலே சொன்ன இப்பிரச்சினைகளைப் பற்றிக் குழந்தைகளிடம் உரையாடும் போது அவர்கள் நாம் இதுவரை யோசிக்காத புதிய கோணத்தில் பல பிரச்சினைகளை முன்வைக்கிறார்கள். அவற்றுள் சில பிரச்சினைகளை இங்கே பார்ப்போம்.

- மாதத் தேர்வு, பருவத் தேர்வு, அலகுத் தேர்வு, ஆண்டுத் தேர்வு, மீள் தேர்வு எனப் பல தேர்வுகள் நடத்துகிறீர்கள். இவ்வளவு தேர்வுகள் நடத்தியும் இரண்டாம் வகுப்பில் யார் யார் நன்றாகப் படித்தார்களோ அவர்களே பத்தாம் வகுப்பிலும் நன்றாகப் படிப்பது ஏன்?

- ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை ஆயிரக்கணக்கான மணி நேரம் ஆசிரியர்களின் பேச்சை நாங்கள் கேட்கிறோம். ஆயிரக்கணக்கான பாடப் புத்தகப் பக்கங்களைப் படிக்கிறோம். ஆயிரக்கணக்கான குறிப்பேட்டுப் பக்கங்களை எழுதி நிரப்புகிறோம். இருந்தும் எங்களின் மொழித்திறன் ஏன் வளரவில்லை?

- ஒரு பாடப் பகுதியை இரண்டு முறை விளக்கிச் சொல்கிறீர்கள். இரண்டு முறை வாசித்துக் காட்டுகிறீர்கள். அதற்குப் பிறகு எங்களிடம் வாசிக்கச் சொல்கிறீர்கள். நான்கு முறை கேட்ட பாடத்தை நாங்கள் எதற்காக வாசிக்க வேண்டும்?

- புரியவில்லை என்று சொன்னால் முன்பு விளக்கிய அதே முறையிலேயே மீண்டும் விளக்குகிறீர்கள். அப்படிச் சொல்லித்தான் புரியவில்லை என்கிறோம் என்பது ஏன் உங்களுக்குப் புரியவில்லை?

- இரட்டை வரி, நான்கு வரி குறிப்பேடுகளில் எழுத எங்களை வற்புறுத்துகிறீர்களே, கரும்பலகையில் எழுதும்போது உங்கள் எழுத்து ஏன் அவ்வளவு அழகாக இல்லை?


- ஒருவரின் புரிதல் எந்தளவுக்கு இருக்கிறதோ அதன்படி அவர்களின் நடவடிக்கைகள் இருக்கும் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொண்டால் குழந்தைகள் வகுப்பறைகளில் ஈடுபாடு காட்டாததற்குக் காரணம் இதுவாக இருக்குமோ?

- தொடர்ந்து அடுத்து வரும் கட்டுரைகளில் கொஞ்சம் விரிவாக உரையாடுவோம்.

- இத்தொடர் கொஞ்சம் உளவியல் சிந்தனையையும் கொஞ்சம் கற்பித்தல் முறையையும் கலந்து பேச வருகிறது.

(தொடரும்)

## வண்ண வண்ண வகுப்பறை






ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, திம்மசந்திரம், கிருஷ்ணகிரி














ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கட்டக்குளம், வாடிப்பட்டி ஒன்றியம், மதுரை



# பூங்காவில் இயங்கும் பள்ளி

கல்வி கற்பிக்கப் பள்ளிகள் சிறந்த இடம். அது எல்லாருக்கும் எல்லா நேரமும் அமையாதபோது சில இயற்கை இடங்களே பள்ளிகளாக மாறுவது காலத்தின் தேவை.

உலகில் உள்ள இயற்கை வளத்தைப் போலவே கல்வியும் அனைவருக்கும் சமமான ஒன்றாகும். பாகுபாடுகள் இல்லாமல் வழங்கப்படுவதே கல்வியின் நோக்கம். தற்போது தொழில்நுட்பங்கள் அதிவேகமாக வளர்ந்துவிட்ட போதிலும் உலகின் சில இடங்களில் உள்ள மாணவர்களுக்குக் கல்வி எளிதாகக் கற்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்த சிலர் இயற்கை வளங்களில் மாணவர்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றனர்.

அந்த வரிசையில் குறிப்பிட வேண்டிய ஒரு பள்ளி, பாகிஸ்தானில் உள்ள பூங்காவில் இயங்கும் அயூப் பள்ளி ஆகும்.

கல்வி கற்கும் இடம் மாறுபட்டாலும், கற்பிக்கும் நோக்கம் ஒருபோதும் மாறுவதில்லை. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள பூங்காவில்தான் வறியநிலையால் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாத மாணவர்களுக்காக இந்தப் பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளி மொஹமத் அயூப் கான் (Mohammad Ayub Khan) என்பவரால் 1986ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இப்பள்ளியைத் தொடங்கிய அயூப்பின் பெயரே இப்பள்ளிக்கும் வைக்கப்பட்டுள்ளது.

## முகமது அயூப் கான்

பாகிஸ்தானைச் சேர்ந்த தீயணைப்புப் படை வீரர் முகமது அயூப் கான். ஏழ்மை நிலையில் உள்ள பல மாணவர்களுக்குக் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு பூங்காவில் பள்ளியைத் தொடங்கி கல்வி கற்பித்து வருகிறார். குடும்பச் சூழ்நிலையால் பள்ளிக்குச் செல்ல முடியாமல், வாகனம் சுத்தம் செய்யும் ஓர் ஆதரவற்ற சிறுவனின் அவலநிலையே அயூப்பிற்கு இப்பள்ளியைத் தொடங்கத் தூண்டுகோலாக இருந்துள்ளது. தீயணைப்புப் படை வீரராகப் பணிபுரியும் அயூப், பணி முடிந்த பின் மீதமுள்ள நேரத்தில் இப்பள்ளியை நடத்தி வருகிறார்.

வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல் மற்றும் தீயை அணைத்தல் போன்ற வேலைகளை உள்ளடக்கி கடந்த 30 ஆண்டுகளாகத் தனது அலுவலகத்திலிருந்து

தற்காலிகப் பள்ளிக்கு சைக்கிளில் சென்று சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இலவசமாகக் கற்பித்து வருகிறார், மாஸ்டர் முஹம்மது அயூப்.

## பாகிஸ்தானின் கல்வி நிலை

உலக அளவில் கல்வி கற்காத மாணவர்கள் அதிகம் உள்ள நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. குறிப்பாக பாகிஸ்தானில் தற்போது சுமார் 2 கோடி மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இத்தகைய சூழலில் சமூகக் கட்டமைப்பு, வறுமை எனப் பல காரணிகள் மாணவர்களின் பள்ளிக் கல்விக்கு நேரடித் தடையாக உள்ளன. பல ஏற்றத் தாழ்வுகள் காரணமாகவும் கல்வி கற்கும் இயல்பான சூழ்நிலை பாகிஸ்தானில் இல்லை. மேலும் குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் முறை எனப் பல பிரச்சினைகளும் வளரும் தலைமுறையின் கல்வியைப் பாதிக்கிறது.

பாகிஸ்தானில் வாழும் 60 சதவிகித ஆண் குழந்தைகளும் 50 சதவிகிதப் பெண் குழந்தைகளும் மட்டுமே பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இந்த நிலையில் அயூப் தொடங்கிய பூங்கா பள்ளி வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தலையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இயங்குகிறது என்பது வரவேற்கத்தக்கது.

## இலவசக் கல்வி

இப்பள்ளியில் ஏழ்மை நிலையில் உள்ள குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி வழங்கப்படுகிறது. அவர்களுக்கு இடைநிலைக் கல்விப் பாடத் திட்டத்தைப் பின்பற்றி முறையான கல்வியும் கற்றுத் தரப்படுகிறது. இப்பள்ளியில் படித்த பல மாணவர்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளனர். அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்ததற்கு இந்தப் பூங்கா பள்ளியே பக்கபலமாக இருந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு இப்பள்ளியின் நிறுவனர் அயூப்பின் நோக்கம் கல்வியோடு வறுமையையும் ஒழிக்க வேண்டும் என்பதே. இது குறித்து அப்பள்ளியின் முன்னாள் மாணவர் தரிக் ஆரிஃப் கூறும் போது, “எங்கள் வெற்றிக்கும் சாதனைகளுக்கும் நாங்கள் இப்பள்ளிக்குக் கடமைப்பட்டுள்ளோம். மாஸ்டர் அயூப் எங்களை இந்தப் பள்ளிக்கு அழைத்துவந்து எங்களுக்குக் கற்பிக்காமல் இருந்திருந்தால், சமூகத்தில் கெட்ட பழக்கங்களை வளர்த்துக்கொண்ட பலரைப் போல நானும் தவறான வழியில் சென்றிருப்பேன்” என்று தெரிவித்தார்.

## அனைவருக்குமான பள்ளி

1980ஆம் ஆண்டு நான்கு மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இப்பள்ளியில் தற்போது சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். பொருளாதாரம் காரணமாகக் கல்வி உரிமையை இழக்கும் குழந்தைகளுக்கு இப்பள்ளி சிறந்த வாய்ப்பை உருவாக்கித் தருகிறது. பள்ளியில் கல்வி கற்பதற்குத் தேவையான பொருளாதாரத் தேவைகளும் முன்னாள் மாணவர்களால் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

அனைத்து வகுப்பு மாணவர்களும் இங்கு கல்வி கற்க முடியும். வேறு பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கும் மாலை நேர வகுப்புகள் இங்கு நடத்தப்படுகின்றன. பின்தங்கிய குழந்தைகளுக்குக் கல்வி வாயிலாக முன்னேறும் வாய்ப்பை வழங்குவதை இப்பள்ளி நோக்கமாகக் கொண்டு இயங்குகிறது.

பாடங்கள் எழுதுவதற்கு நோட்டுப் புத்தகங்கள் இல்லாத மாணவர்களுக்கு வீணாகும் தாள்களை இணைத்து நோட்டு தைத்துத் தரப்படுகிறது. உருது, கணிதம், அறிவியல், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் இப்பள்ளியில் கற்றுத் தரப்படுகின்றன. இப்பள்ளியில் படித்து தற்போது நல்ல நிலையில் இருக்கும் முன்னாள் மாணவர்கள் மீண்டும் இப்பள்ளிக்கு வந்து இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பள்ளியை மேலும் மேம்படுத்தி முறையாக நடக்கும் பள்ளிகளைப் போல மாற்றுவதும், பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதும் மாஸ்டர் அயூப்பின் நோக்கமாகும். அனைத்துத் தரப்பு மாணவர்களுக்காகவும் இப்பள்ளியின் கதவுகள் என்றும் திறந்திருக்கும் என்கின்றனர்.

இது போன்ற பள்ளிகளால்தான் கல்வி மறுக்கப்படும் மாணவர்களுக்கு எளிமையான முறையில் கல்வி கற்கும் சூழ்நிலை உருவாகும் என்பது திண்ணம்.

– சுகுணாதேவி




# வரப்பெற்றோம்




ஆசிரியர்கள் எழுதி வெளியிட்ட புத்தகங்கள் குறித்த அறிமுகம் இப்பகுதியில் இடம் பெறும். இப்பகுதியில் தங்களின் நூலும் இடம் பெற விரும்பும் ஆசிரியர்கள் 'வரப்பெற்றோம் பகுதி' என்று குறிப்பிட்டு நூலின் இரண்டு பிரதிகளை அனுப்பலாம்.

கனவு ஆசிரியர், 8ஆவது தளம், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, எண்.68,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை – 600 006





பாடப் புத்தக அறிவு மட்டுமே மனித வாழ்க்கைக்கு முழுமை தந்துவிடாது. அழகிய கதைகள் வாயிலாகவும் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குரிய கருத்துகளை எடுத்துக்கொள்ளலாம். வாழ்க்கையில் முன்னேற, பெரியவர்கள் தோல்வியிலிருந்து மீண்டு வெற்றி பெற்ற கதைகளைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம் போன்ற 30 முத்தான கருத்துகளை முன்வைக்கிறது இந்நூல்.

**நூல்:** ஒற்றைச் சிப்பியில் முப்பது முத்துகள்,
**ஆசிரியர்:** வே. சண்முகதேவி,
**வெளியீடு:** வாகைப் பதிப்பகம், எண்: 70/1, இடையர்பாளையம் மெயின் ரோடு, மணிகண்டன் நகர் முகப்பு, குனியமுத்தூர், கோவை–641008.
**பக்கம்:** 104, **விலை:** ரூ.100/-




இப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கதையிலும் ஏன்? எதற்கு? எப்படி? ஆகிய மூன்று கேள்விகளைக் கேட்டு எழுதியிருக்கிறார் ஆசிரியர். இம்மூன்று கேள்விகளையும் மாணவர்கள் தேவைப்படும் இடத்தில் நிச்சயம் கேட்க வேண்டும் என்பது ஆசிரியரின் கருத்து. குறைந்தபட்சம் குழந்தைகளிடம் மூடநம்பிக்கைகளைத் தவிர்க்கும் உரையாடலைத் தொடங்கவாவது இந்நூல் உதவும்.

**நூல்:** கேள்வி கேட்டுப் பழகு,
**ஆசிரியர்:** சக.முத்துக்கண்ணன், ச.முத்துக்குமாரி, **வெளியீடு:** புக்ஸ் ஃபார் சில்ரன், 7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600018.
**பக்கம்:** 47, **விலை:** ரூ.50




பண்பும் நீதியும் ஒருவர் ஆற்றும் தொழிலில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை 'இங்கிதம் ஐம்பது' என்னும் ஐம்பது தலைப்புகளில் விளக்கியுள்ளார் நூலாசிரியர். ஆளுமை, நிர்வாக மேலாண்மை, தலைமைப் பண்பு, கடமைகளும் உரிமைகளும் போன்ற தலைப்புகளில் ஐம்பது சிந்தனைகளை அங்கதச் சுவையோடு தந்திருக்கிறார்.

**நூல்:** செய்தொழில் நேசி,
**ஆசிரியர்:** சுந்தரசோமன்,
**வெளியீடு:** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–5
**பக்கம்:** 62, **விலை:** ரூ.90

சமூகத்தில் நிகழும் சறுக்கல்களைச் சீர்செய்து வாசகர்களைக் குழந்தை உலகில் பயணிக்க வைக்கும் இந்நூல் 66 கவிதைகளைக் கொண்டுள்ளது. 'கூட்டைத் தாங்கும் மரக்கிளைக்குத் தாய்மையின் பூரிப்பு' என்கிற வரிகளெல்லாம் வாசிக்கும்போதே மரத்தையும் தாய்மையையும் ஒருசேரக் கண்முன் காட்டுகிறது.

நூல்: மீன் சறுக்கு,
ஆசிரியர்: கொ.சுமதி, வெளியீடு: அறம் பதிப்பகம் 7A, வீரபத்ரா 2ஆவது வீதி, சத்தி ரோடு, ஈரோடு –3. பக்கம்: 80, விலை: ரூ. 65








மாணவச் சமுதாயத்திற்குச் சிறு எளிய கருத்துகளின் வாயிலாக வாசிப்பின் முக்கியத்துவத்தை மிக அழகாக உணர்த்தியுள்ளார் ஆசிரியர். ஒருவரின் மனநிலைகளைப் புரிந்து செயல்பட வேண்டும் என்ற புரிதலை 'மனதினைப் படிப்போம்' என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ளார். நூலில் 27 முத்தான கருத்துகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

நூல்: நானும் பேசுவேன்.
ஆசிரியர்: கா. ரகுபதி,
வெளியீடு: நெய்தல் பதிப்பகம்,
சென்னை–600005.
பக்கம்: 64, விலை: ரூ.60

நிறம், முக வடிவம், பெற்றோர் இவை எல்லாம் மாற்ற முடியாதவை. சோம்பேறித்தனம், முன்கோபம் இவையெல்லாம் மாற்றிக்கொள்ளக் கூடியவை. வெகுமதிக்காகப் படிக்கின்ற படிப்பு நீண்ட நாள்கள் நீடிக்காது. இப்படி நூல் முழுக்க நிறைய கருத்துகள் நிரம்பிக் கிடக்கின்றன. சி.பி.வர்க்கீஸ், சே.ச. எழுதிய 'த ஈகில் இன் யூ' என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் இந்நூல்.

நூல்: உனக்குள் ஒரு சக்தி,
ஆசிரியர்: தா.கிறிஸ்டியன் கீலர்,
வெளியீடு: வெற்றி மொழி வெளியீட்டகம், எண். 29, கிழக்கு ரத வீதி, திண்டுக்கல்.
பக்கம்: 96, விலை: ரூ. 90







சாலைப் போக்குவரத்து விதிகள், இருசக்கர வாகனப் பயன்பாடுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆட்டோ ஓட்டுநர் கடமைகள், குழந்தைத் தொழிலாளர் தடை போன்ற தற்காலத் தேவை சார்ந்த கருத்துகளையும் மாணவர்களுக்குத் தேவையான நெறிமுறைகளையும் சேர்த்து சிறுவர் பாடல்களாக கல்வி, அறிவியல், இயற்கை, உயிரினங்கள், சமூகம், கருணை, இரக்கம், அன்பு போன்ற 45 தலைப்புகளின்கீழ் இனிய பாடல்களாகப் படைத்திருக்கிறார் நூலாசிரியர்.


நூல்: பள்ளி செல்லும் தம்பியே, ஆசிரியர்: சேவு.முத்துக்குமார்,
வெளியீடு: மௌவல் வெளியீடு, 21/9, வரதர் தெற்கு மடவிளாகம் தெரு,
வலங்கைமான்–612 804. பக்கம்: 92, விலை : ரூ.120

உங்களின் தகவல்கள்
ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி
மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?

பள்ளிக்
கல்வித் துறையின்
மாணவர்
உதவி எண்



14417

# மீண்டெழுந்த ஆர்மீனியாவின் கல்வி

ஆசியா, ஐரோப்பா இடையே அமைந்துள்ள காகசஸ் மலைத்தொடரில் உள்ளது ஆர்மீனியா நாடு. முன்னாள் சோவியத் யூனியனில் மிகச் சிறிய குடியரசாகத் திகழ்ந்ததும் இதுவே. ஆர்மீனிய மலைப் பகுதியில் வசிக்கும் மக்கள் நூற்றாண்டுகளுக்கும் மேலாக மேய்ச்சலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். 29 ஆயிரத்து 800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நாட்டில் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு இடர்களைச் சந்தித்து வரும் இம்மக்கள் தற்போது கல்வியில் தங்களுக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளனர். அதற்கு அவர்களின் கல்வி வரலாற்றை அறிந்து கொள்வது அவசியமாகிறது.




## கல்வி வரலாறு

ஆர்மீனிய மக்களின் பழங்காலக் கலாசாரத்தைப் பாதுகாக்கும் இம்மலைப் பகுதி நாகரிகத்தின் தொட்டிலாகத் திகழ்கிறது. அந்த நாடு பலரது ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டபோதும் தனக்கென தனித்துவமான மொழி, பரந்த இலக்கியம், கலை முதலியவற்றைக் கொண்டுள்ளது. ஆர்மீனியா நாடு நான்காம் நூற்றாண்டிலேயே அதிகாரபூர்வமாகக் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிக்கொண்டது. எனவே அதன் தாக்கங்கள் கல்வியிலும் இருந்தது.

5ஆம் நூற்றாண்டு வரை ஆர்மீனிய மக்கள் கிரேக்கம், அரமேயம், சிரியாக் உள்ளிட்ட மொழிகளைப் பயன்படுத்தி வந்தனர். மெஸ்ரோப் மாஷ்டோட்ஸ் (Mesrop Mashtots) எனும் மொழியியல் அறிஞரால் ஆர்மீனிய எழுத்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து முதல் ஆர்மீனியப் பள்ளி தொடங்கப்பட்டது. எனினும் அது மக்கள் மத்தியில் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

7ஆம் நூற்றாண்டில் அனனியா ஷிரகாட்ஸி (Anania Shirakatsi) என்பவரால் உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளி, ஆர்மீனியக் கல்வியின் மைல்கல்லாக அமைந்தது. கற்பித்தல் குறித்த அவரது எழுத்துகள் ஆர்மீனியாவையும் தாண்டி பெரும் வரவேற்பைப் பெற்றது. உயர் கல்விக்கான ததேவ் அகாதமி (Academy of Tatev) 9ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. அடுத்த 400 ஆண்டுகளில் ஆர்மீனியாவின் கல்வி அமைப்பில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. அதன் தொடர்ச்சியாகப் பல்வேறு கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டன. குழந்தைகளை நேசிப்பதே கற்பித்தலுக்கான மையப்புள்ளி என்பதை எடுத்துரைத்த ஹொவான்னெஸ் இமாஸ்டசர் (Hovhannes Imastaser) என்பார் புகழ்பெற்றது இந்தக் காலகட்டத்தில்தான்.

## படையெடுப்புகளால் பாதிப்பு

ஆர்மீனிய மக்களின் கல்வி நீண்ட காலப் படையெடுப்புகளால் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. துருக்கியர்களின் படையெடுப்பால் 11ஆம் நூற்றாண்டில் ஆர்மீனியர்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர். இந்தக் காலகட்டத்தில் தொடங்கப்பட்ட ஆர்மீனியாவின் முக்கிய உயர் கல்வி நிறுவனம் கிளாட்ஸோர் தொடர் படையெடுப்புகளால் கடுமையான பாதிப்பைச் சந்தித்தது.

பல தொடர் நடவடிக்கையால் 13 – 15ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு நூலகங்கள் உருவாக்கப்பட்டன. பள்ளியில் புத்தகங்கள் வழங்கப்பட்டன. 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆர்மீனியாவில் அதிகமான பள்ளிகள் இருந்தன. எதிர்பாராதவிதமாக 16ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற தொடர் படையெடுப்புகளால் பல பள்ளிகள் மூடப்பட்டன. ஆர்மீனிய மக்கள் இதனால் சிதறிப் போயினர்.

## கல்வியில் முன்னேற்றம்

1638ஆம் ஆண்டு ஈரானில் அமைக்கப்பட்ட முதல் அச்சகத்துக்குப் பெரிதும் உதவியது ஆர்மீனியர்கள். கட்சதூர் அபோவியன் (Khatchadour Abovian) என்பவர் நவீன ஆர்மீனிய மொழியில் எழுதிய 'உண்ட்ஸ் ஆப் ஆர்மீனியா' (Wounds of Armenia) எனும் நாவல் 1858ஆம் ஆண்டு வெளியானது. ஆர்மீனியாவில் கல்வி பெரும் வளர்ச்சி அடைந்தது இந்தக் காலகட்டத்தில்தான். ஆசிரியர் பயிற்சி, கல்வித் திட்டங்கள், பள்ளிகள் மேம்பாடு எனப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா பெரும் வளர்ச்சியடைந்தது. அதனோடு இருந்த தொடர்பால், ஆர்மீனிய மக்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## பண்பாட்டு அழிப்பு

வரலாற்றில் முதன்முதலாக இனப்படுகொலைக்கு ஆளானது ஆர்மீனிய மக்கள்தான் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அவர்களின் கல்வி, பண்பாட்டு மறுமலர்ச்சி அடியோடு சிதைக்கப்பட்டன. 1894 - 1896ஆம் ஆண்டுகளில் உதுமானிய துருக்கியர்களால் கிட்டத்தட்ட 2 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். முதலாம் உலகப்போர் முடியும்வரை ஆர்மீனியர்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்தனர்.

## கல்வி வளர்ச்சி

1918ஆம் ஆண்டு ஆர்மீனியா குடியரசாக நிறுவப்பட்டது. அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. சோவியத் செம்படை உதவியோடு 1920ஆம் ஆண்டு ஆர்மீனியா கம்யூனிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டது. ஆர்மீனியாவில் கல்வி பெரிதும் வளர்ச்சியடைந்தது இந்தக் காலகட்டத்தில்தான். மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களிடம் இருந்து பள்ளிகள் பிரிக்கப்பட்டன. 16 சதவிதத்தில் இருந்த எழுத்தறிவு அடுத்த 20 ஆண்டுகளில் 84 சதவிகிதமாகக் கணிசமாக அதிகரித்திருக்கிறது. 1960ஆம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. எனினும் கல்வி ஆர்மீனிய மக்களின் பண்பாட்டை உள்ளடக்கியதாக இல்லை.

1980-களின் இறுதியில் சோவியத் யூனியனின் அதிகாரம் ரஷ்ய அதிபர் மிக்கைல் கொர்பசேவ் (Mikhail Gorbachev) கைகளுக்குச் சென்றது. அவர் ஆர்மீனிய மக்களுக்கு ஏற்ப சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

## பூகம்ப பாதிப்பு

ஆர்மீனியப் பகுதியிலும், அதன் கல்வி அமைப்பிலும் நல்ல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த வேளையில்தான் 1988ஆம் ஆண்டு ஆர்மீனியா பெரும் பூகம்பத்தைச் சந்தித்தது. 50 கிராமங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. 500 பள்ளிகள் இந்த பூகம்பத்துக்கு இரையாகின. 50 ஆயிரம் ஆர்மீனியர்கள் உயிரிழந்தனர். 5 லட்சம் பேர் வீடற்றவர்கள் ஆனார்கள்.


சோவியத் யூனியன் பிரிந்த பின்பு 1991ஆம் ஆண்டு ஆர்மீனியர்கள் தங்களைத் தனிக் குடியரசாக அறிவித்துக் கொண்டனர். இந்தியாவைப் போலவே K - 12 கல்வி அமைப்பு அங்கே பின்பற்றப்படுகிறது. குழந்தைகளின் கல்வியை உறுதி செய்யவும், கல்வியை மேம்படுத்தவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆர்மீனியாவின் எழுத்தறிவு தற்போது 98 சதவிகிதத்துக்கும் மேல். தங்கள் நிலப்பரப்பின் சிக்கல்களைப் புரிந்துகொண்டு மெல்ல மெல்ல மீண்டு வந்து அம்மக்கள் இந்த நிலையை அடைந்துள்ளனர். யூனிசெஃப் (UNICEF) ஆர்மீனியாவின் கல்வி வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் உதவி வருகிறது.

– தராக்கி



ஆசிரியர் நூலகம் 14




# குடும்பமாகச் சேர்ந்து படிக்கிறோம்

ஆசிரியர் தெ. சித்ரா

நான் எட்டாம் வகுப் [illegible] அறிவியல் பாடம் எடுத்தவர் ஆசிரி [illegible] வேளையில் பொதுச் சொத்துகளைப் [illegible]. அப்போது, நூலகத்தைப் பற்றிப் பேச [illegible] வாழ்வதற்கு நூல்களை வாசிப்பது அவசியமானது [illegible] வாசிப்பினால் வாழ்வில் உயர்ந்த மாபெரும் தலைவர்க [illegible] விளக்கிக் கூறினார்.

அப்போது, எங்கள் ஊரில் நூலகம் எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. நான் ஆசிரியரிடம் "நமது ஊரில் நூலகம் எங்கிருக்கிறது? அங்கு சென்று எப்படிப் புத்தகங்களை எடுத்துப் படிப்பது?" என்று கேட்டபோது, ஆசிரியர், "நூலகத்தில் உறுப்பினர் பணம் கட்டி முதலில் உறுப்பினராகச் சேர வேண்டும். புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கலாம்" என்று சொன்னார்.




அன்று பள்ளி முடிந்து மாலையில் வீட்டிற்குச் செல்லும் வழியில் இருந்த நூலகத்தை ஆசை ஆசையாய் பார்த்துக்கொண்டு போனேன். மறுநாள் அம்மாவிடம் ஐந்து ரூபாய் பணம் பெற்றுக்கொண்டு நானும், என் சில தோழிகளும் நூலகத்தில் உறுப்பினரானோம்.

ஆசிரியர்களே!

உங்கள் வீட்டில் நீங்களும் நூலகம் அமைத்துள்ளீர்களா?
அந்த நூலகம் அமைக்கும் எண்ணம் எப்போது வந்தது, உங்கள் சேமிப்பில் உள்ள நூல்களில் மிக முக்கியமானதாகக் கருதும் நூல்கள் பற்றியெல்லாம் சுவாரசியமாக எழுதி அனுப்புங்களேன்!

'ஆசிரியர் நூலகம்', கனவு ஆசிரியர், மாத இதழ்
8ஆவது தளம், ஈ.வி.கே.சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை – 6

எங்களுக்கு எந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்க வேண்டும் என்ற பெரிய அறிவெல்லாம் இல்லை. அதனால் நாங்கள் படங்களையும், வண்ணங்களையும் பார்த்தே புத்தகங்களை எடுத்தோம். அப்போது எங்களுக்குத் தெரிந்த பெயர் எல்லாம் திருவள்ளுவர், பாரதியார், சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத்சிங், காந்தி, நேரு, கோகலே போன்ற இன்னும் சில தலைவர்களின் பெயர்கள்தான். அதுவும் நாங்கள் பேச்சுப் போட்டியில் அடிக்கடி அவர்களைப் பற்றிப் பேசுவதால் தெரிந்தது.

எனக்கு நூலகத்தில் வரிசையாக அடிக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைப் பார்த்ததும் தலைவாழை இலை ஒன்றில் எல்லாப் பதார்த்தங்களும் வைக்கப்பட்டிருக்கும்போது எதைச் சாப்பிடுவது என்று தெரியாமல் அதில் ஒன்று, இதில் ஒன்று என்று எடுத்துச் சாப்பிட்டுப் பார்ப்பதைப் போல் ஆவல் ஏற்பட்டது. எல்லாப் புத்தகங்களையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டே போனேன்.

ஒரு புத்தகத்தை எடுத்துச் சென்று அன்று இரவே தூங்காமல் படித்தும் முடித்தேன். ஒரே இரவில் முழு நூலையும் படித்தது மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. இப்படியாக ஏதேதோ புத்தகங்களைத் தொடர்ச்சியாக வாசிக்க ஆரம்பித்தேன்.

அப்போதுதான் புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும் என்று தோன்றியது. உடனே, அம்மாவிடம் சொல்லி ஒரு மர அலமாரியைத் தயார் செய்துதரச் சொன்னேன். அம்மாவும் சில மாதங்களில் பழைய மர அலமாரி ஒன்றை விலைக்கு வாங்கிக் கொடுத்தார். எப்போதுமே நான் எனது வகுப்புப் புத்தகங்களைப் பத்திரமாக வைத்துக் கொள்வேன். அந்தப் புத்தகங்களை எல்லாம் அந்த அலமாரியில் அடுக்கி நூலகத்தைப் போன்று தொட்டுப் பார்த்தேன்.

அடுத்தடுத்து எந்த மாதிரியான நூல்களைப் படிக்க வேண்டும் என்று ஆசிரியரிடமும் நூலகரிடமும் கேட்டு, அதன்படி வாசிக்க ஆரம்பித்தேன். அப்படியாக நான் முதலில் வாசித்த அதிகப் பக்கங்களைக் கொண்ட நாவல்தான் எஸ்.பாலசுப்பிரமணியன் எழுதிய 'சந்திரவதனா' வரலாற்று நாவல்.

என்னுடைய ஆசிரியர் பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டியும், வகுப்பறையைப் பற்றிய புரிதல் வேண்டியும், அது தொடர்பான புத்தகங்களையும் தேடி வாங்கிப் படித்தேன்.

பேராசிரியர் ச. மாடசாமி அவர்கள் எழுதிய 'ஆசிரிய முகமூடி அகற்றி' என்னும் புத்தகம் எனக்குள் ஒரு மாற்றத்தையும் வகுப்பறை பற்றிய புரிதலையும் கொடுத்தது. இப்புத்தகம் அமெரிக்காவைச் சேர்ந்த ஆசிரியர் மக்கோர்ட் என்பவர் தன் வகுப்பறை அனுபவமாக எழுதிய 'டீச்சர் மேன்' (Teacher Man) என்னும் நூலின் வாசிப்பனுபவம்.

இதில் அவர் கூறியிருக்கும் ஒன்று, "நீ அவர்களைப் பார்த்துக் கத்தினாலோ, திட்டினாலோ அவர்களை இழக்கிறாய். உன் சத்தத்துக்குப் பிறகு சலனமற்று மௌனமாய் அவர்கள் வகுப்பறையில் உட்கார்ந்து இருப்பது உன்னைத் திருப்பி அடிப்பது போல, அத்துடன் வகுப்பறை முடிந்துவிட்டது." இந்த வார்த்தைகள் என்னையே நான் கேள்வி கேட்டுக்கொள்ளச் செய்தது.

அதைப்போலவே ஆசிரியர் பழ.புகழேந்தி அவர்கள் எழுதிய 'கரும்பலகையில் எழுதாதவை' என்ற நூலில் வகுப்பறையின் ஒவ்வொரு பிரச்சினைகளையும் கச்சிதமாக, கவிதையாக வடித்திருப்பார். அதில் ஒன்றுதான் இந்தக் கவிதை.

"சார்..."

ஒரு விரல் தூக்கியபடி எழுந்தான்

அனுப்பினேன்.

"சார்"

உடனே மற்றொருவன்.

அதட்டினேன்.

நொடிகள் நகர

உள்ளேயே ஈரம்

வகுப்பு முழுவதும் நாற்றமடித்தது

என் அதிகாரம்"

என்று கவிதை ஒவ்வொன்றிலும் நச்சென்று ஒவ்வொரு கருத்தைக் கூறியிருந்தார்.

ஆயிஷா இரா. நடராஜன் எழுதிய 'வன்முறையில்லா வகுப்பறை', 'இது யாருடைய வகுப்பறை?' போன்ற நூல்களில், உலகில் குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்கும் நாடுகளில்தான் கல்வியும் நிறைவாக உள்ளது, ஆசிரியர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், வகுப்பறைகளும் குதூகலமாக உள்ளன என்றும் கூறியிருக்கும்.

இது போன்ற நூல்களை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டும். இதன் வழி தங்களுடைய மாணவர்களைப் பற்றிய புரிதலை ஆசிரியர்கள் மேம்படுத்த முடியும். தனது துறையில் சிறந்து விளங்க நினைக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் இதைப் போன்ற நூல்களைக் கட்டாயம் படிக்க வேண்டும்.


இப்படிப் படிப்படியாகத் தொடங்கிய ஆர்வத்தினால் நான் ஆசிரியராக வேலைக்கு வந்த பிறகு மாணவர்களிடம் வாசிப்பின் அவசியத்தைக் குறித்து அடிக்கடி பேசினேன். பள்ளியில் உள்ள நூல்களையும், அருகில் உள்ள நூலகத்தில் உள்ள புத்தகங்களையும் எனது பொறுப்பில் எடுத்துப் படிக்கக் கொடுத்தேன். ஆர்வமில்லாத மாணவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தொட்டாவது பார்க்கட்டுமே என்று நினைத்துக் கொடுத்தேன். தொட்டுப் பார்ப்பவர்கள் ஒரு நாள் என்னைப் போலத் திறந்து படிப்பார்கள் என்றே நம்புகிறேன்.

இப்படியாக, எனக்கு நூல்கள் மீது ஏற்பட்ட ஆர்வமே இப்போது எனது வீட்டில் உள்ள இந்த நூலகம். இதில் ஐயாயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் உள்ளன. இலக்கண நூல்கள், சங்க இலக்கிய நூல்கள், சேர, சோழ பாண்டிய மன்னர்களின் வரலாறு பற்றிய நூல்கள், திருவாசகம், பைபிள், குர்ஆன், பகவத் கீதை போன்ற புனித நூல்களும், அறிவியல், கணிதம் சம்பந்தமான நூல்களும், புகழ் பெற்ற எழுத்தாளர்களான புதுமைப்பித்தன் தொடங்கி, இன்றுள்ள இளம் எழுத்தாளர்கள் வரையிலான அனைத்து நூல்களும் எனது நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

தத்துவ நூல்களும், போட்டித் தேர்விற்குத் தயார் செய்வதற்குத் தேவையான மனோரமா இயர் புக், டி.என்.பி.எஸ்.சி. புத்தகங்களும் உள்ளன. மாதாந்திர இதழ்களான காலச்சுவடு, காக்கைச் சிறகினிலே, உயிர்மெய், திணை, தீராநதி, தாமரை போன்றவற்றையும் சேகரித்தும் படித்தும் கொண்டிருக்கிறேன். இப்படி ஏராளமான புத்தகங்களை வாங்கிக் குவித்துள்ளேன். என் வாழ்வில் நான் சம்பாதித்த மிகப்பெரிய சொத்து இந்தப் புத்தகங்கள்தான். இணைய தளங்கள் இருந்தாலும் புத்தகங்களைத் தொட்டுப் படிப்பது என்பதே மிகவும் அலாதியானது.

இந்தப் புத்தகங்கள் எப்போதும் நம்மோடு பலர் உரையாடுவதைப் போன்ற உணர்வுகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். நான் தொலைக்காட்சியில் அதிக நேரம் செலவழிக்காமல் புத்தகங்களோடு நிறைய நேரம் இருப்பதால் என் மகனும் மகளும் புத்தகங்களை எடுத்துப் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்புறமென்ன குடும்பமாகச் சேர்ந்து வாசிக்க ஆரம்பித்து விட்டோம்.

– தெ. சித்ரா, இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆண்டாங்கரை
திருத்துறைப்பூண்டி, திருவாரூர்.







ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, இடையமேலூர், சிவகங்கை






# வண்ண வண்ண வகுப்பறை





ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, கரையப்பட்டி, அரிமளம் ஒன்றியம், புதுக்கோட்டை







# விளையாட்டு முறை கல்வியே குழந்தைகளின் விருப்பம்

## ஆசிரியர் க.பாக்யலஷ்மி

**கு**ழந்தைப் பருவம் விளையாட்டுகள் நிறைந்தது. அந்த விளையாட்டுகளை விதவிதமாகச் சொல்லித் தந்தால் எப்படி இருக்கும்? அதுவும் பள்ளியில் விளையாட்டுகள் வாயிலாகக் கல்வியைக் கற்பித்தால் எப்படி இருக்கும்? கற்கண்டாக இனிக்கும் அல்லவா. இதைத்தான் கடந்த 22 ஆண்டுகளாகச் செய்து வருவதாகச் சொல்கிறார் ஆசிரியர் க.பாக்யலஷ்மி.

சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம், தாசநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றுகிறார் இவர். இந்தப் பள்ளியில் 63 மாணவர்கள் படிக்கிறார்கள்.

### வகுப்பறை செயல்பாடுகள்

பாக்யலஷ்மியின் தந்தை அறிவுறுத்தியதன் காரணமாகத்தான் நாமக்கல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்திருக்கிறார். ஆறு மாத இடைவெளியில் பணி வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. செயல்முறைக் கற்பித்தலில் மாணவர்களுக்கு ஆர்வம் அதிகம் இருந்திருக்கிறது. அதனால் முதல் கட்டமாக அழிந்து வரும் பாரம்பரிய விளையாட்டுகளைக் குழந்தைகளுக்கு எண்ணியல் கலந்து சொல்லித் தந்திருக்கிறார். அது வெற்றி அடைந்திருக்கிறது.




பயிற்றுவிக்கிறார் பாக்யலக்ஷ்மி. இதனால் மெல்ல கற்கும் (Slow learners) குழந்தைகளும் இதர குழந்தைகளுடன் இணைந்து மகிழ்ச்சியாகப் பழகிக் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டதை உணர்ந்திருக்கிறார். இதனால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் வகுப்பறையில் சிறப்பான இடத்தைப் பிடித்தன.

இதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக விளையாடப்பட்டு வந்த இருபத்து நான்குக்கும் மேற்பட்ட



## விளையாட்டு முறை கல்வி

பாக்யலஷ்மி, ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரையான குழந்தைகளுக்கான வகுப்பாசிரியர். காலை உணவு உண்டவுடன் குழந்தைகள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக கதை அட்டைகளைத் தருகிறார். குழந்தைகள் அதை அங்கங்கே அமர்ந்து படித்துவிட்டு வகுப்புக்கு வந்து படித்த கதையைச் சொல்லவேண்டும். அதற்கு மதிப்பெண் வழங்குகிறார்.

அதோடு வகுப்பில் உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள், ABCD ஆகிய எழுத்துகளைத் தரை ஓவியங்களாக வரைந்தும் வைத்திருக்கிறார். அதைப் பார்த்து உள்வாங்கிக் கொண்டு விளையாட்டாகப் பார்த்து இரசித்துப் படிக்கிறார்கள் மாணவர்கள்.

பரமபதம், பகடை, பல்லாங்குழி போன்ற விளையாட்டுகள் வாயிலாகவும் பாடங்களைப் விளையாட்டுகளை மீட்டுருவாக்கி குழந்தைகளுக்குக் கற்பித்து வருகிறார்.

குழந்தைகளைக் கவரும் வகையில் ஒன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரையான மாணவர்களை ஈர்க்கும் விதத்தில் 250க்கும் மேற்பட்ட அசைபடங்களின் வீடியோக்களைத் தயாரித்து, தனது யூடியுப் சேனலில் பதிவேற்றம் செய்துள்ளார்.

குழந்தைகள் தாங்களே மதிப்பீடு செய்து கொள்வதற்கு ஏற்ப இருநூறுக்கும் மேற்பட்ட, நேரடியான பணித்தாள்களைத் தயாரித்து மாணவர்களுக்கு மொபைல் வாயிலாக அனுப்பியுள்ளார் பாக்யலஷ்மி. அதை



அவர்கள் வீட்டிலும் கைப்பேசி வாயிலாகவும் பார்த்து வீட்டுப் பாடம் செய்யலாம். அதற்கு உடனே மதிப்பெண்ணும் கிடைத்து விடும். "திரும்பத் திரும்பக் குழந்தைகள் பயிற்சி எடுத்துக்கொண்டே இருப்பார்கள் என்பதுதான் இந்த வடிவத்தைத் தேர்வு செய்ததன் நோக்கம்" என்றும் சொல்கிறார்.

இதோடு இரண்டு பிரிவாகப் பிரிந்து குழந்தைகள் விளையாடும் வகையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாம்பூசல் (Bamboozle), ஸ்கிராட்ச் (Scratch) போன்ற விளையாட்டுகளை உருவாக்கி, வகுப்பறையில் விளையாடும் முறையில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பத்தை மாணவர்களே அறிந்து விளையாடும்படிச் செய்து வருகிறார். ஏ.ஆர்., வி.ஆர். தொழில்நுட்பத்தைக் கற்று மாணவர்களுக்கு மெய்நிகர் உருவத்தை வரச் செய்திருக்கிறார். அதாவது புலி என்றால் புலி உருவம் வரும் வகையில் வகுப்பறையில் உருவாக்கி கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளைச் செயல்படுத்தி வருகிறார்.

## பொம்மலாட்டக் கல்வி

பொம்மலாட்டம் பெரியவர்களையும் கவர்ந்த கலை. அது குழந்தைகளை இன்னும் கவரும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் வகையில் கம்பி பொம்மை, கையுறை, காலுறை பொம்மைகள், குச்சி பொம்மை, நிழலுருவ பொம்மை, விரலில் மாட்டி நடக்கிற பொம்மை போன்ற ஆறு வகையான பொம்மலாட்டங்களை வகுப்பறையில் நிகழ்ச்சியாக நடத்திக் காட்டி வருகிறார். இந்தப் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் நன்னெறிக் கதைகள் அதிகம் இடம்பெற்றிருக்கும். இதனால் குழந்தைகளின் வருகை குறைவுறாமல் இருக்கிறது.

இவரே எழுதி நடத்திய இந்தப் பொம்மலாட்டச் செயல்பாடு இவரது வகுப்பு மட்டுமன்றி ஐந்தாம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி சேலம் மாவட்டத்தில் மற்ற பள்ளிகளுக்கும் சனிக்கிழமைகளில் இந்தப் பொம்மலாட்டக் கல்வியை இலவசமாகக் கற்பிக்கச் சென்று வருகிறார்.

உத்தமசோழபுரம், சேலம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் முதல்வர் ஆன்லைனில் பாக்யலஷ்மி நடத்திய பொம்மலாட்ட நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு இவருக்குப் பொம்மலாட்டக் கலைக்கான பயிற்சியும் ஸ்கிரிட் எழுதி, இயக்கி நடத்தும் வரை கற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார். என்னை இந்தளவுக்கு உற்சாகமாகச் செயல்பட வைத்த சே.மா.ஆ.ப.பள்ளிக்கு நன்றி" என்றார் பாக்யலஷ்மி.

## உயர்தரப் பயிற்சி

நகர்ப்புறப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கிடைக்கும் அபாகஸ் (Abacus) கணிதப் பயிற்சியானது ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்கள் படிக்கும் இந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காக பாக்யலஷ்மி, அபாகஸ் கற்றுக்கொண்டு, இவரது பள்ளிக் குழந்தைகளுக்கும் பயிற்சி அளித்து வருகிறார். அதோடு வேறு பல இடங்களில் நடக்கும் அபாகஸ் போட்டிகளிலும் தம் மாணாவர்களைப் பங்கேற்க வைத்திருக்கிறார். அதில் 15 குழந்தைகள் போட்டியில் வென்று சான்றிதழ் பெற்றிருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

## வாசிப்பு நேசிப்பு

மெல்லக் கற்கும் மாணவர்கள் சிறப்பாகப் பயிலும் வகையில் தனித்தனி எழுத்தில் தொடங்கும் சொற்கள் அடங்கிய பயிற்சி அட்டைகளைத் தயார் செய்திருக்கிறார். இது கைப்பேசியிலும் உள்ளதால் வீட்டிலும் குழந்தைகள் பயிலலாம்.

குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கம் ஏற்படவேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்டதே ஆன்லைன் கல்வி ரேடியோ. இதன் வாயிலாக 500க்கும் மேற்பட்ட ஆடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது.




ஆன்லைன் கல்வி ரேடியோவில் காமராஜர் பிறந்த நாள், குடியரசு தினம், சுதந்திர தினம், தேசிய அறிவியல் தினம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் குழந்தைகளுக்குச் சான்றிதழ்கள் பெற்று வழங்கியுள்ளார்.

மெல்லக் கற்கும் மாணவர்களுக்காகத் தமிழ், ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களுக்குத் தனது சொந்த முயற்சியில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பயிற்சி முறைகளைத் தயாரித்துப் பயிற்சி வழங்கி வருகிறார்.

## கதை அட்டைகள்

குழந்தைகளின் வாசிப்புத் திறனை வளர்ப்பதற்காக மாவட்ட ஆசிரியர் கல்வி நிறுவனம் வாயிலாக 100 கதை அட்டைகள் கிடைத்துள்ளன. அதைக்கொண்டு மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதற்காகப் பயிற்சி வழங்கி வருகிறார். இதில் அதிகக் கதை அட்டைகளை வாசிக்கும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் சிறந்த வாசிப்பாளர் விருதும் சான்றிதழும் தலைமையாசிரியர் எஸ்.விஜயாவும் பாக்யலஷ்மியும் சேர்ந்து வழங்குகிறார்கள்.

எண்ணும் எழுத்தும் திட்டத்திற்கு ஏற்றாற்போல் தனது வகுப்பறையை வண்ணமயமாக மாற்றி, கற்றல், கற்பித்தலில் ஈடுபட்டு வருகிறார்.

## பள்ளி வளர்ச்சியும் உள்கட்டமைப்பு

இந்தப் பள்ளியின் முன்னாள் மாணவர் ஒருவரின் உதவியால் ரூ.15 லட்சத்தில் ஸ்மார்ட் கிளாஸ் ரூமும் ஐந்து கணினியும் வழங்கப்பட்டுள்ளன. சுற்றுச்சுவர் மற்றும் வகுப்பறையின் உள்பகுதியில் வண்ணப் படங்கள் வரையப்பட்டுள்ளன.

மாவட்ட மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கனவுப் பள்ளி அமைக்க ஒன்றரை லட்சம் ரூபாய் நிதி உதவியுடன் நாற்காலி, மேசை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பள்ளியில் மண் தரையே காணப்படவில்லை. எல்லா இடத்திலும் டைல்ஸ், ஃபேப்ரிக் கற்களே பதித்துள்ளதால் பள்ளியின் தோற்றம் முற்றிலும் மாறி, தூய்மையாகக் காட்சி அளிக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்கு பாக்யலஷ்மி ஆன்லைன் வகுப்பு எடுத்துள்ளார். அது மிகவும் சிறப்பாக இருந்தது என்பதைப் பாராட்டி மாவட்ட ரோட்டரி சங்கத்தினர் இவரது பள்ளிக்கு ஸ்மார்ட் டி.வி. மற்றும் இரண்டு பீரோக்களை வழங்கியுள்ளனர் என்பதைப் பெருமையாகக் குறிப்பிடுகிறார்.

## குழந்தைகளுக்கான அங்கீகாரம்

மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கான எந்தக் கலைப் போட்டிகள் நடந்தாலும் தம் பள்ளி மாணவர்கள் கலந்துகொள்ளும் வகையில் பல வகையிலும் உதவி வருகிறார். போட்டிகளுக்குச் செல்லும் மாணவர்கள் பரிசுகளை வென்று வருவதோடு, பலர் மாநில அளவிலான பல போட்டிகளிலும் கலந்துகொண்டு, பரிசுகளை வென்றுள்ளனர். ஆசிரியர் பாக்யலஷ்மியும் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டுச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

## முழுமையான ஒத்துழைப்பு

இவரது கணவர் மலைக் கிராமமான மலங்காடு ஊராட்சி ஒன்றியம் சங்ககிரி அரசுப் பள்ளியில் தலைமை ஆசிரியராக உள்ளார். இருவரும் ஒரே பகுதிப் பள்ளியில் பணியாற்றுவதால், பள்ளி சார்ந்த எந்தக் கற்பித்தல் செயல்பாடாக இருந்தாலும் இரண்டு பள்ளிகளுக்கும் பகிர்ந்துகொண்டு பணியாற்றுகிறார்களாம். கல்விச் செயல்பாடுகளுக்காக வெளியில் செல்வதாக இருந்தால் கணவரது முழு ஆதரவும் உள்ளதாகத் தெரிவிக்கிறார் பாக்யலஷ்மி. இவர்களுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் பத்தாம் வகுப்பு, இன்னொருவர் ஆறாம் வகுப்பு படிக்கிறார்கள்.

– இந்திரா மூர்த்தி



# எதிர்காலத்துக்கான கடவுச்சீட்டு

“மனித உரிமைக்கான போராட்டத்தில் கல்வி முக்கியமான அங்கம் வகிக்கிறது. நம் குழந்தைகளுக்கு உதவவும், சுய மரியாதையை உயர்த்தவும் அது அவசியம். கல்விதான் எதிர்காலத்துக்கான கடவுச்சீட்டு, அதற்கு இன்றே தங்களைத் தயார்படுத்துபவர்களுக்கு மட்டுமே நாளை சொந்தமாகிறது.”

**- மால்கம் எக்ஸ்**

மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்






மூன்று தலைமுறையாகப் பட்டிமன்ற நடுவர் என்றால் மக்கள் மனதில் நிறைந்திருப்பவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா. படிப்பாளிகளுக்கான இலக்கிய வழக்காடு மன்றங்கள் நடந்துகொண்டிருந்த காலத்தில் பட்டிமன்றங்களைத் தன் யதார்த்த பேச்சு மொழியால் பட்டிதொட்டி எங்கும் உள்ள பாமரர்களையும் இரசிக்க வைத்தவர். நல்ல கருத்துகளை நகைச்சுவை கலந்து பேசுவதில் வல்லவர். பேராசிரியராகப் பணியாற்றிய சாலமன் பாப்பையா பல மேடைகளைக் கண்டவர். அதேபோல் பல இலக்கிய நூல்களையும் எழுதியிருக்கிறார். இவர் தன் பள்ளிக்கால சுவாரசிய அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்.

“ஒரு சாதாரண மில் தொழிலாளி வீட்டில் பிறந்தவன் நான். அப்பா சுந்தரம், அம்மா பாக்கியம். நாலு

# பள்ளிகளே என்னை வளர்த்தன!

பேரா. சாலமன் பாப்பையா

சகோதரி, நாலு சகோதரர்கள். ஒன்பதாவது பையன் நான். மதுரை திருமங்கலத்துக்குப் பக்கத்தில் உள்ள சாத்தங்குடின்ற கிராமம் என் பெற்றோர் வாழ்ந்த ஊர். கிராமத்துக்குள்ள பெரிய வேலை வாய்ப்பு இல்ல. என் பெற்றோர் அந்தக் காலத்துல பஞ்சம் பொழைக்கிறதுக்காக ஒரே ஒரு வீட்ட மட்டும் விட்டுட்டு வேற நிலபுலத்த வித்து கொஞ்சம் காசை எடுத்துக்கிட்டு மதுரைக்கு வந்துட்டாங்க. அங்குதான் நான் பிறந்தேன். எங்க அப்பாவுக்கு மதுரையில மதுரா கோட்ஸில் வேலை கிடைச்சது. இருந்தாலும் வறுமையின் பிடியில்தான் என் வாழ்க்கை நகர்ந்தது.



நான் வாழ்ந்த பகுதியில அப்ப நிறைய பேர் படிப்பறிவு இல்லாதவங்க. பெரிய அளவுல கத்துக்கிறதுக்குப் பெரிய ஆட்கள் இல்லே. நான்தான் அந்தப் பகுதியில இருந்து படிக்கிற ஆளு. அந்தக் காலத்துல பள்ளிக்கூடத்துல படிக்கிறதுக்குச் சம்பளம் கட்டணும். சில நேரத்துல நான் சம்பளம் கட்டலன்னு சொன்னா எனக்காக ஆசிரியர்கள் கட்டியிருக்காங்க. அதை மறக்க முடியாது.

ஒண்ணாம் வகுப்பில் நாகுன்னு ஒரு வாத்தியார் இருந்தார். அவருடைய எழுத்தும் வகுப்பும் இன்னும் எனக்கு நினைவில் இருக்கு. அவ்வளவு சுவையாகப் பாடம் நடத்துவார். அவரு ரொம்ப நல்ல ஆசிரியர்.

ஒன்றாம் வகுப்புல இருந்து எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் மதுரையிலதான் படிச்சேன். முதலில் நகராட்சிப் பள்ளியில் நான்காண்டுகள் படித்தேன். அடுத்து டி.இ.எல்.சி. பள்ளியில் இரண்டாண்டுகள் படித்தேன். தல்லாகுளம் பக்கத்தில் அமெரிக்கன் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில எஸ்.எஸ்.எல்.சி. படித்தேன்.

இந்த மூன்று பள்ளியிலும் எனக்குக் கிடைத்த ஆசிரியர்கள் எல்லாம் மிகச் சிறந்தவர்கள். எல்லாமே சாதாரணமான பள்ளிக்கூடங்கள் தான். ஆனால் அவர்கள் காட்டிய பாசம் அளப்பறியது. நாங்க அப்பல்லாம் சட்டைகூட சரியா போட்டிருக்க மாட்டோம். ஆனா அந்த ஆசிரியர்கள் எங்க மேல காட்டின அக்கறை இருக்கு பாருங்க, இப்ப அப்படி கிடைக்குமா என்பது சந்தேகமா இருக்கு. இப்பவும் அப்படி ஆசிரியர்கள் இருக்கலாம். என் விஷயத்தில் அப்படித் தோணுது. எந்தத் துறையாக இருந்தாலும் மிகவும் ஈடுபாட்டோடும் அக்கறையோடும் சொல்லித் தந்தார்கள் ஆசிரியர்கள்.

இதுல பாராட்ட வேண்டிய அம்சம் என்னன்னா... நான் ரெண்டாவது படிக்கும்போது டேனியல் என்கிற ஆசிரியர் இருந்தாரு. அவருக்குத் திருமணம் ஆகல. உடம்ப நல்ல கட்டுக்கோப்பா வளத்து வைச்சிருந்தாரு. காரணம் அவரு அனுமன் பக்தர். அவரு வெள்ளிக்கிழமைன்னா எங்க கையில காசு கொடுத்து நாட்டுச்சக்கர, தேங்காய் சில்லு, பொட்டுக்கடலை எல்லாம் வாங்கிட்டு வரச் சொல்வாரு. நான்தான் போயிட்டு வாங்கிட்டு வருவேன். கொஞ்ச நேரம் சாமிகிட்ட வைச்சி பிரார்த்தனை பண்ணச் சொல்வாரு. நாங்கல்லாம் கிறிஸ்டியன் ஆளுகளா வளர்ந்தவங்க. ஆனாலும் எங்கக்கூட படிச்ச பிள்ளைங்க எல்லாருமே இந்தியப் பழக்கத்துல வளர்ந்தவங்க. ரெண்டாம் வகுப்பு படிக்கும்போதே எனக்குள்ளே சமயங்களைப் பற்றிய கொஞ்சம் விரிவான தோற்றத்தை உருவாக்குச்சு.

டி.இ.எல்.சி. பள்ளிக்கூடத்தில் நான் கத்துக்கிட்டது என்னன்னா.. அங்க லைசியம் கிளாஸ்னு இருக்கும். லைசியம்னா பேச்சு அரங்கம். அங்க மாதத்துல ஒரு நாள் ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் பேச்சாளர்கள் வரணும். எனக்கு ஏதோ கொஞ்சம் பேசத் தெரிஞ்சிருக்குன்னா அங்க போட்ட விதைதான். அங்க இருந்துதான் நான் நல்லா பேசக் கத்துக்கிட்டேன்.

அதுக்கப்பால மேல்நிலைப் பள்ளிக்கு வந்த பிற்பாடு அங்க கிடைத்த ஆசிரியர்கள் அற்புதமானவர்கள். தமிழ்ப் பாடம் எடுத்த நடையரசனார், வீரராகவனார் என்கிற ஆசிரியர்கள் மெச்சத் தகுந்தவர்கள். அவர்கள் சொல்வார்கள். "தமிழைப் பேசும்போது ரொம்ப அழுத்தம் திருத்தமா ஒலிப்பு, உச்சரிப்பு இருக்கணும்" என்று. அங்கதான் தமிழ்ச்சொற்கள் நிறைய கத்துக்கொண்டேன். வீரராகவனார் நல்ல பாடகர். அவர் பாடுவதைக் கேட்டுக் கேட்டு நானும் கொஞ்சம் பாடுவேன். அன்றைய சினிமா பாட்டுத்தான். வேற ஒண்ணும் தெரியாது.







இளம் வயதில்

### தோல்வியில் கற்றுக்கொண்டேன்!

அந்தக் காலங்களில் நகராட்சிப் பள்ளிகளில் இப்ப நடக்கிறா மாதிரி அடிக்கடி போட்டிகள் நடக்காது. ரொம்ப குறைவாகத்தான் நடக்கும். நான் ரெண்டாம் வகுப்பு படிச்சிக்கிட்டிருக்கும்போது நகராட்சிப் பள்ளி மாணவர்களுக்குள்ள ரெண்டாவது உலகமகா யுத்தத்த பத்தி ஒரு பேச்சுப் போட்டி வச்சிருந்தாங்க. அதுக்கு எழுதிக் கொடுத்தவர் நாகுன்ற ஆசிரியர். அதை நான் ஒரே நாளில் மனப்பாடம் பண்ணிட்டேன். ஆனா மேடைப் பேச்சை எப்படிப் பேசணும்னு அவருக்குச் சொல்லித்தரத் தெரியல. ஏன்னா அவரு நல்ல ஆசிரியர், நல்ல பேச்சாளரில்ல. சட்டைய இப்படி பிடிச்சுக்கோ கால இப்படி வச்சுக்கோ, நடுவர்கள பார்த்துப் பேசுன்னு சொன்னாரு. அப்படியே பேசினேன். ஆனாலும் எனக்கு எந்தப் பரிசும் கிடைக்கல. இதனால நானும் சோர்ந்து போகல. என் ஆசிரியரும் தளர்ந்து போகல. தோல்வியில் இருந்து கற்றுக்கொண்டு, அடுத்தடுத்த வாய்ப்புகளில் அப்பப்ப மேடைகள்ல பேசினேன். பிறகு திருவள்ளுவர் இலக்கியக் கழகம் நடத்திய பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு நிறைய தடவை முதல் பரிசுகள வாங்கினேன்.

அதுக்கப்புறம் அங்க திருவள்ளுவர் இலக்கியக் கழகம்னு ஒண்ணு இருந்தது. அந்த இலக்கியக் கழகத்திலயும் பேசுறதுக்குக் கத்துக்கொடுத்தாங்க. நான் ஏற்கெனவே பேசியிருக்கிறன் பாருங்க, அதனால் இங்கே எனக்கு இன்னொரு வாய்ப்பு கிடைச்சது. இந்த இலக்கியக் கழகத்துல செயலாளரா இருந்திருக்கிறேன்.

ஓவிய ஆசிரியர் சிற்றரசு என்னை நாடகங்கள நடிக்க வைச்சாரு.


நான் பாட்டுப் போட்டியில் கலந்துகொள்றது, நாடகங்களில் நடிக்கிறது, பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்றதுன்னு இதுல எல்லாமே மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பழக்கிவிட்டாங்க. நாடகப் போட்டிகள்ல நடிச்சு பரிசு வாங்கியிருக்கேன். பேச்சுப் போட்டிகள்ல நிறைய பரிசு வாங்கியிருக்கேன். படம் வரைஞ்சிருக்கேன். என் எழுத்து ரொம்ப நல்லாவே இருக்கும். இப்படி என்னை வளர்த்தது பள்ளிக்கூடங்கள்தான்.

இந்தப் பள்ளிக் காலத்துல மிகச் சிறந்த நண்பர்கள் கிடைத்தார்கள். அந்த நண்பர்களின் உதவியாலதான் நான் இன்னைக்கு இந்த நிலைமையில இருக்கிறேன். நட்பு என்றால் அவன் 'தனக்கில்லை என்றாலும் எனக்குக் கொடுப்பான்'. அவய்ங்க கொஞ்ச வசதிகாரங்க. அவங்க உதவியிலதான் நான் படிச்சுக்கிட்டிருந்தேன். ஆனா தன்னைப் பெரிசுபடுத்த மாட்டாங்க. அவய்ங்க எல்லாம் என்னைய பெரிய மனுஷனா நினைச்சுக்கிட்டு அண்ணே அண்ணேன்னு என்கூடயே திரிவாங்க. அப்படி ஒரு தூய நட்பு கிடைச்சது பள்ளியிலதான். அப்படி நிறைய நண்பர்கள் இருந்தாங்க. குறிப்பா தியாகராஜன், வாசுதேவன், அப்துல் காதர்."


– பொன்மூர்த்தி



கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, எருக்கூர், மயிலாடுதுறை








வண்ண வண்ண வகுப்பறை









ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆச்சிமங்களம், தாந்தோணி ஒன்றியம், கரூர்

# ஆடல் பாடலுடன் பாடம் நடத்துவதே சிறப்பு

## ஆசிரியர் கிரேஸ் ஆனந்தி



கடுமையான சூழலில் இருந்து குழந்தைகள் கல்வி கற்க வந்திருந்தாலும் அவர்களிடம் உள்ள தனித்திறன்களைக் கண்டறிவதே ஓர் ஆசிரியரின் கடமை. இந்தக் கடமையை மிகவும் சிரத்தையுடன் செய்து வருகிறார் ஆசிரியர் வி. கிரேஸ் ஆனந்தி. இவர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள முன்னூத்திக்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.






## சிறு வயது முதலே ஆசிரியர் கனவு

திருநெல்வேலியைச் சேர்ந்த ஆசிரியர் கிரேஸ் ஆனந்தி சங்கரன்கோயிலில் தனது பள்ளிப் படிப்பை முடித்துள்ளார். இவர் தந்தை காவலராகப் பணிபுரிந்த போதிலும் இவருக்குச் சிறு வயது முதலே ஆசிரியராக வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்துள்ளது. இவரின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவரின் அன்பான அணுகுமுறையே இவருக்கு ஆசிரியர் பணி மீதான எண்ணத்தை உறுதியாக்கியுள்ளது. அப்போது நடனம், பேச்சுப் போட்டி எனப் பாடத்தைத் தாண்டி பல போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார்.

பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் மதிப்பெண் அடிப்படையிலான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் தேர்வாகியுள்ளார். வரலாறு பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து தந்தையின் முழு ஆதரவால், 2002ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப்புறப் பள்ளி ஒன்றில் பணியில் சேர்ந்துள்ளார். சரியான போக்குவரத்து வசதி இல்லாத கிராமமாக இருந்துள்ளது.

தோட்டம், ஓடைகள் நிறைந்த பாதை எனப் பள்ளிக்குச் சென்று வருவதில் பல சிக்கல்கள் இருந்துள்ளன. இருந்தாலும் அப்பள்ளி மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். அப்பள்ளியில் இருந்து பணி மாறுதல் பெற்றுச் செல்வதற்கு முன் அங்குள்ள மாணவர்களின் பெற்றோர் மிகவும் வருத்தப்பட்டுள்ளனர். தற்போது பணியாற்றி வரும் பள்ளிக்கு வந்த பின்னர் அப்பள்ளிக் குழந்தைகளுக்கென கடந்த 21 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருகிறார் ஆசிரியர் கிரேஸ் ஆனந்தி.




## ஆசிரியர் என்றாலே பிரியம்

ஆரம்பப் பள்ளி மாணவர்களோடு இருப்பதே மிக்க மகிழ்ச்சியான ஒன்றாகக் கருதி வருகிறார். அக்கிராமப் பகுதியில் இருக்கும் குழந்தைகளின் குடும்பச் சூழ்நிலை, பொருளாதாரச் சிக்கல் என அனைத்துவிதமான பிரச்சினைகளையும் கேட்டு அன்போடு பழகுவதால், ஒரு சில மாணவர்கள் இவரை அம்மா என்று அழைத்து வருகின்றனர். கல்வி கற்பதை அடுத்து ஓவியம், நடனம் எனக் கலைகளையும் கற்றுத் தந்து மாணவர்களை வழிநடத்தி வருகிறார்.

இவரது மாணவர்கள் பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டிகளில் மாவட்ட அளவில் கலந்து கொண்டுள்ளனர். அரசுப் பள்ளி ஆசிரியர்களே மாணவர்களின் அடிப்படை வாழ்க்கைத் திறனுக்கு ஆதாரமாக விளங்குகின்றனர் என்பதை உணர்ந்து பணியாற்றி வருகிறார்.

சேலம் கல்வி வானொலி நிகழ்வில் கல்வி நிகழ்ச்சிகளில் இவரின் மாணவர்களும் பங்கு கொண்டுள்ளனர். இவரது வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் விடுமுறை என்றாலே வருந்தும் அளவிற்கு இவரது வகுப்பு சுவாரசியமாக இருந்து வருகிறது.

கூடுதலாக மாணவர்களுக்குப் பிடித்த நிறத்தில் உடை அணிவது, விரும்பும் வகையில் காலை வணக்கம் சொல்வது என முழுவதும் மாணவர்களின் மன விருப்பத்திற்கேற்பச் செயலாற்றி வருகிறார்.

குறிப்பாக, கொரோனா கால கட்டத்திலும் மாணவர்களுக்குச் சிறப்பாகக் கல்வி கற்றுக் கொடுத்துள்ளார். மாணவர்களோடு நண்பராகப் பழகுவதால் அவர்களுக்கு மிகவும் பிரியமான ஆசிரியராக இருந்து வருகிறார். ஒவ்வொரு மாணவரிடம் இருந்தும் கற்றுக்கொள்ள ஏதாவது ஒரு திறன் இருக்கிறது என்பதை ஆசிரியர் கிரேஸ் ஆனந்தி கண்டறிந்துள்ளார். அரசுப் பள்ளி மாணவர்கள் மீதான கண்ணோட்டம் சிறப்பான நிலையை எட்டிவரும் நிலையில் இவரின் பணி அளப்பறியது.

## பின்தங்கிய மாணவர்கள் மீது சிறப்பு கவனம்

இவரது பள்ளியில் படிக்கும் மாணவர்கள் சமூக, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பச் சூழ்நிலையில் இருந்து வருகின்றனர். இதனை அறிந்து அவர்கள் மீது சிறப்புக் கவனம் அளித்து, அவர்களிடம் உள்ள திறன்களைக் கண்டறிந்து வருகிறார். பள்ளியில் பாடம் நடத்தும் போதும், மாணவர்கள் விருப்பத்திற்கேற்ப



குடும்பத்தினருடன்





நடனமாடியும், பாடல்கள் பாடியும் பாடம் நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

ஆரம்பக் கல்வி தரமானதாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே மிகவும் பொறுப்புடன் செய்து வருகிறார். குழந்தைத் திருமணம், மதுப் பழக்கத்திற்கு அடிமையான பெற்றோரின் குழந்தைகள் முன்னேற்றம் என சமுதாயத்தின் சிக்கலான சூழ்நிலைகளில் இருக்கும் குழந்தைகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். கல்வியின் தேவை குறித்தும் எடுத்துரைத்து உறுதியான பள்ளிப் படிப்பை நிறுவ முயற்சி செய்து வருகிறார்.

## உற்சாகம் தரும் பணி

எண்ணும் எழுத்தும் திட்டத்தில் சிறந்த ஆசிரியர்கள் பட்டியலில் மாநில அளவில் சிறந்த ஆசிரியர் விருது பெற்றுள்ளார் கிரேஸ். மாவட்ட அளவில் சிறந்த பள்ளி மற்றும் சிறந்த செயல்திறனுக்காக மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரிடம் பாராட்டுச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார். இத்தகைய விருதுகளே கூடுதல் பொறுப்புடன் பணியாற்ற உற்சாகம் ஊட்டுவதாகவும் தெரிவிக்கிறார்.

## கணவரின் ஆதரவு

ஆசிரியர் கிரேஸ் ஆனந்தியின் கணவர் பால்ராஜ், இவர் பணியாற்றும் பள்ளியிலேயே பணியாற்றி வருகிறார். இருவரும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் என்பதால் கணவரின் பக்கபலத்துடன் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இவருக்கு விமல் ஜோஸ்வா, சாம் ஜோஷியல் என்ற இரு மகன்கள் உள்ளனர். வீட்டில் தனது மகன்களைப் போல் பள்ளி மாணவர்களையும் மிகவும் சிரத்தையுடன் கவனித்து வருகிறார். இவரின் பணிக்கு குடும்பத்தாரின் ஒத்துழைப்பு ஒரு முக்கிய காரணமாக இருந்து வருகிறது.

தன் முகம் வாடி இருந்தாலும் ஏன் அப்படி இருக்கிறீர்கள் என்று கவலை கொள்ளும் மாணவர்களுடன் பணியாற்றுவது தனக்குக் கிடைத்த வரமாகக் கருதி வருகிறார் கிரேஸ் ஆனந்தி. இவரின் பணி இவரைப்போல் பணியாற்றும் மற்ற அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் முன் உதாரணமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

– சுகுணாதேவி

# அழகிய கலைப் பொருள்களாகும் பழைய காலணிகள்



காலநிலை மாற்றம் பலரையும் இயற்கைப் பாதுகாப்பை நோக்கி நகர்த்தியிருக்கிறது. இதன் தாக்கத்தால் இயற்கை ஆர்வலர்கள் தங்களால் முடிந்த அளவு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இயற்கை மாசைத் தடுக்கும் கலைப் படைப்புகளைச் செய்து வருகின்றனர்.


நெகிழிப் பொருள்கள் போலவே இயற்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பவைதான் ஃபிளிப் ப்ளாப்ஸ் (Flip – flops) எனப்படும் காலணிகள். இவை செயற்கை இழைகள், பெட்ரோலியப் பொருட்களால் உருவாக்கப்படுபவை. இரண்டு ஆண்டுகள் வரை உழைக்கக் கூடிய இந்தக் காலணிகள், மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் குப்பைகளோடு இணைந்து கொள்கின்றன.

கடல் மாசுபாட்டுக்கான காரணங்களில் இந்தக் காலணிகளுக்கும் பெரும் பங்குண்டு. கென்யாவின் கடற்கரையில் ஃபிளிப் ப்ளாப்ஸ் கழிவுகள் ஆண்டுக்கு 80 ஆயிரம் கிலோவுக்கு மேல் குவிகின்றன. இந்த ஆபத்தை உணர்ந்த ஜூலி சர்ச் (Julie Church) எனும் கடல் பாதுகாவலர் (Marine Conservationist), இதற்குத் தீர்வு காண முடிவு செய்திருக்கிறார்.

மறுசுழற்சி செய்ய முடியாத ஃபிளிப் ப்ளாப்ஸ்களுக்கு ஜூலி சர்ச் முயற்சியால் மறுவடிவம் கிடைத்திருக்கிறது.

## கலைநயமான கடற்கரை குப்பைகள்

ஜூலி சர்ச்சால் ஓசன் சோல் (Ocean sole) என்ற நிறுவனம் தொடங்கப்பட்டு, ஃபிளிப் ப்ளாப்ஸ்களுக்குச் சிற்பங்கள், விளையாட்டுப் பொருள்கள் எனப் பல்வேறு வடிவங்கள் கிடைத்துள்ளன. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பும் தடுக்கப்படுகிறது; கென்ய மக்களும் வேலை வாய்ப்பைப் பெற்றுப் பயனடைகின்றனர்.



## ஓசன் சோல் உருவான கதை

1990ஆம் ஆண்டு இறுதியில் ஜூலி சர்ச் கென்யாவின் தலைநகர் நைரோபியில் கடல் பாதுகாவலர் பணியை மேற்கொண்டு வந்துள்ளார். அப்போது அங்குள்ள கடற்கரை ஒன்றில் ஃபிளிப் ப்ளாப்ஸ்கள் குவிந்து கிடப்பதைப் பார்க்கிறார்.

இந்தக் குப்பைகளால் மீன்கள் இறப்பது, கடல் தாவரங்கள் பாதிப்படைவது, ஆமைகள் முட்டையிட கடற்கரை வராதிருப்பது எனப் பல்வேறு தீமைகள் நிகழ்வதை அவர் உணர்கிறார். இந்தச் சமயம்தான் அங்குள்ள குழந்தைகள் ஃபிளிப் ப்ளாப்ஸ்களை விளையாட்டுப் பொருள்களாகப் பயன்படுத்துவதைப் பார்க்கிறார்.

அந்தக் குழந்தைகளின் பெற்றோரைச் சந்தித்து, ஃபிளிப் ப்ளாப்ஸ்களைச் சேகரிப்பதோடு நில்லாமல், அதைச் சுத்தம் செய்து, வெட்டி வடிவமைக்க ஊக்குவித்துள்ளார். பின்னர் அதை மார்க்கெட்டில் விற்று குடும்பச் செலவை ஈடுகட்டலாம் என்பதையும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிந்தனைக்குச் சரியான பாதை அமைக்கத்தான் 1998ஆம் ஆண்டு ஓசன் சோல் நிறுவனம் தொடங்கப்பட்டது.

கால் நூற்றாண்டுகள் கடந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிறுவனம், ஓர் ஆண்டுக்கு லட்சக்கணக்கான ஃபிளிப் ப்ளாப்ஸ்களுக்கு அழகிய மறுவடிவம் கொடுக்கிறது. இந்தக் கலைப் பொருள்கள் உலகெங்கும் விற்கப்படுகின்றன.

ஃபிளிப் ப்ளாப்ஸ்களைச் சேகரிப்பவர்கள், வடிவமைப்புக் கலைஞர்கள் என ஆயிரத்துக்கும் அதிகமான கென்யர்கள் இதனால் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதனால் அவர்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றம் நிகழ்ந்துள்ளது.

## கடற்கரையில் இருந்து கலை

ஓசன் சோல் பணியாளர்கள் கென்யாவின் கடற்கரையில் கிடக்கும் ஃபிளிப் ப்ளாப்ஸ்களைச் சேகரிக்கின்றனர். அவை சுத்தம் செய்யப்பட்டு, வெட்டி தேவைக்கேற்ப வடிவமைக்கப்படுகின்றன. அனைத்துச் சிற்பங்களும் சிறிய தச்சுப் பொருட்களின் உதவியோடு கைகளால் செய்யப்படுபவை.



தங்கள் பொருள்களை உலகளவில் பிரபலப்படுத்த ஓசன் சோல் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ரோம் பேஷன் நிகழ்ச்சி, ஸ்வீடன் நாட்டின் கலாசார அருங்காட்சியகம், லண்டன் உயிரியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஓசன் சோலின் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்நிறுவனத்தின் வியாபாரம் பெரிய உயரத்தை அடைந்துள்ளது.

## ஓசன் சோலின் மந்திரம்

ஓசன் சோலின் செயல்பாட்டுக்குக் காரணம், "நம்பிக்கையில் இருந்து வணிகம், வணிகத்தில் இருந்து விழிப்புணர்வு, விழிப்புணர்வில் இருந்து பாதுகாப்பு" என்ற மூன்று மந்திரங்கள்தான் என அதன் நிறுவனர் ஜூலி சர்ச் கூறுகிறார்.

"வணிகப் பொருள்களை நம்மால் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை நம் மக்களுக்கு விதைக்க வேண்டும். பின்னர் நாம் உருவாக்கிய பொருள்கள் விற்பனைக்குச் செல்லும்போது விழிப்புணர்வு பிறக்கும், செய்த தவறுகளைத் திருத்திக் கொள்வோம். இந்த விழிப்புணர்வு நமக்குப் பாதுகாப்பை வழங்கும்" என்கிறார் ஜூலி சர்ச்.

## எதிர்காலம்

காலத்துக்கு ஏற்ப தங்கள் நிறுவனங்களின் தயாரிப்புப் பொருள்களை மாற்ற, சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்து தங்களோடு கைகோர்க்க விரும்பும் நிறுவனங்களையும் அரவணைக்கத் தயாராக இருக்கிறார் ஜூலி சர்ச். சிறந்த கண்ணோட்டம்தான்.

– அருண்













# கடைப்பிடிக்க வேண்டிய கோடை கால உணவு முறைகள்

ஏப்ரல் தொடங்கி ஜூன் மாதம் வரைக்கும் கோடை வெயிலின் தாக்கம் குறையாது இருக்கும். அதுவரை வெப்பத்தின் காரணமாக நமக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகம். இதற்கு முதன்மைக் காரணமாகச் சொல்லப்படுவது உணவு முறைதான். வெப்பத்தின் பாதிப்பிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான உணவு முறைகள் என்ன என்பது குறித்து ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியின் பொது மருத்துவத் துறையின் தலைவர், பேராசிரியர், மருத்துவர் எஸ்.சந்திரசேகர் தரும் விளக்கம் இதோ.



மருத்துவர்
எஸ்.சந்திரசேகர்

## பருவ காலமும் உணவுகளும்

இயற்கையே நம் உடலுக்கு ஏற்ற உணவு வகைகளை காலத்திற்கேற்ப விளைவிக்கிறதைப் பார்க்கலாம். குறிப்பாக வெள்ளரி, தர்ப்பூசணி, போன்ற நீர் பழங்கள், பூசணிக்காய் போன்ற காய்கள், எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற பழ வகைகளைச் சொல்லலாம். இதுதான் இயற்கையாக நம்மைக் காக்கும் மாமருந்துகள். இதுதான் இயற்கையாக இயற்கை நமக்குக் கற்றுத் தரும் பாடம். அதை மீறி உடலுக்கு வெப்பத்தையும் இரத்த ஓட்டத்தைத் தடை செய்யும் அதிகக் கொழுப்புள்ள உணவுகளையும் உட்கொண்டால், அதற்கான பலனாக நம் உடலில் இயற்கை பலவிதமான வெப்ப பாதிப்புகளை ஏற்படுத்துவதைப் பார்க்கலாம். அதனால் வெயில் காலங்களில் எளிதாகச் செரிமானம் ஆகக்கூடிய

உணவுகளையே நாம் உட்கொள்ள வேண்டும். இந்தக் காலகட்டங்களில் உடலில் நீர்ச்சத்துக் குறைபாடு எல்லாருக்கும் ஏற்படுகிற ஒரு பொதுவான பிரச்சினை. அதற்கு நீர்க்காய்கள் உதவும். அதிகக் காரம் உள்ள உணவுகளைத் தவிர்க்கவேண்டும் என்பது பொது விதி.

## நம்மைப் பாதுகாக்கும் உணவுகள்

தாகம் எடுக்க எடுக்கத் தண்ணீரைத் தேவையான அளவுக்குக் குடித்துக் கொண்டே இருக்கவேண்டும். தாகம் தீர்க்கும் பழங்களான தர்ப்பூசணி, கிர்ணிப் பழம், அத்திப்பழம், ஆரஞ்சு, எலுமிச்சம் பழச் சாறுகள் போன்ற குளிர்ச்சி தரும் பானங்கள், வெயிலுக்கு நம் உடம்பின் உள்ளுறுப்புகளையும் மேல் தோலையும் முகத்தையும் பாதுகாக்கிறது. ஆனால் இந்தப் பழங்கள் குளிர்பதனப் பெட்டியில் வைத்து எடுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது. காரணம் அதில் உள்ள இயற்கைத்தன்மை அப்படியே இருக்காது. அதை எடுத்து உடனே சாறாக்கிக் குடிக்கும்போது அது நம் உடலில் வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை மறக்கக்கூடாது. அதோடு பாட்டிலில் தண்ணீர் நிரப்பி குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் குடிப்பதால் செரிமானப் பிரச்சினை, தொண்டைக் கரகரப்பு, மலச்சிக்கல் ஏற்படும்.

வெயில் காலங்களில் வெப்பத்தை வெளிப்படுத்தக் கூடிய உடலமைப்பு கொண்டவர்கள் காரம் இல்லாத தயிர் சாதம், மோர் சாதம், கஞ்சி சாதம் ஆகிய உணவுகளை உட்கொள்வது ரொம்ப நல்லது. வீட்டிலேயே சமைத்த உணவுகளை உட்கொள்வதுதான் மிகவும் நல்லது.

## ஒவ்வாமை தரும் உணவுகளும் பழக்கங்களும்


வண்ணக் கலவையான இரசாயனம் கலந்த அமிலத்தன்மை உள்ள உணவுகள், அஜினோமோட்டோ கலந்த மற்றும் கார உணவுகள், எண்ணெய் அதிகம் உள்ள வறுத்த, பொரித்த உணவுகள் பலருக்கும் ஒவ்வாமையை இந்த வெயில் காலத்தில் ஏற்படுத்தக்கூடும் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டியது அவசியம்.

அதை அலட்சியம் செய்து உண்பவர்களுக்கு வயிற்று உபாதைகள், வயிற்றுப் போக்கு, வாந்தி, தோல் பிரச்சினைகள், வேர்க்குரு, தோல் சிவத்தல், தடித்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இந்த ஒவ்வாமைகளைத் தவிர்க்க மேற்கண்ட நீர்க் காய்கள், பழங்கள், குளிர்ச்சி தரும் கீரைகளை உண்பது நல்லது.

சிலர் வெயிலில் இருந்து வந்தவுடனே குளிரூட்டப்பட்ட அறையில் நுழைவார்கள். அல்லது குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து வெளிவந்த உடனே வெயிலில் பயணிப்பார்கள். இரண்டுமே தவறு. உடல்

வெயில் காலத்திலும்

# சளி உண்டாவது ஏன்?



மழைக் காலத்தில்தான் ஒருவருக்குச் சளி, தும்மல், இருமல், காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பது தவறான கருத்து. இந்தப் பாதிப்புகள் வெயில் காலத்திலேயும் பலருக்கு வருவதற்குக் காரணம் உண்டு.

காரணம், ஒன்று... தாகத்திற்குக் கிடைத்த தண்ணீரைக் குடித்துவிடுவார்கள். அது பாதுகாக்கப்பட்ட நல்ல தண்ணீராக இருக்காது.

காரணம் இரண்டு, பலர் வெயில் காலங்களில் பயணம் செய்வார்கள். வெளியூருக்கோ, சுற்றுலா தலம், மால்கள், கடற்கரை ஆகிய இடங்களுக்கோ பயணப்படுவார்கள். அப்போது பாதுகாக்கப்பட்ட தண்ணீரா என்று பார்க்கமாட்டார்கள். பயணக் களைப்பில் ஆசையாகக் குளிர்ந்த நீரையோ, குளிர்ந்த பழச்சாறு, பனிக்கூழ் (ஐஸ்க்ரீம்) ஆகியவற்றைப் பருகுவார்கள். அப்போது இதமாக இருக்கும். ஆனால் அன்று தூங்கி எழுந்த பிறகு மேற்கண்ட பாதிப்புகளை உணர்வீர்கள்.



காரணம் மூன்று, வெயில் காலத்தில் காற்றில் வைரஸ் கிருமிகள் வேகமாகப் பரவும் வாய்ப்பு உள்ளதால் அதன் வாயிலாக சுகாதாரம் பேணாதவர்களுக்குச் சளி, தும்மல், இருமல் போன்ற பாதிப்புகள் பரவலாம்.

எந்தச் சூழ்நிலையிலும் இந்த உணவு நமக்கு ஏற்றதா என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளாத உணவுகளைத் தவிர்ப்பது நம் கடமை. அதோடு சிறுநீர் அடிக்கடி கழிக்கவேண்டும். சோம்பலின் காரணமாகச் சேர்த்து வைத்து வெளியேற்றுவது மிகவும் தவறான ஒரு செயலாகும்.

வெப்பம் மற்றும் குளிரைத் தாங்கும் அளவுக்கு அதற்கு அவகாசம் தரவேண்டும். இல்லாவிட்டால் அந்த உடலானது உடனே தும்மல், மூக்கடைப்பு, தொண்டை வறட்சி, கண்களில் அரிப்பு, எரிச்சல் போன்ற எதிர்வினைகளை ஆற்றும். அதனால் வெளியில் செல்லும் முன் வீட்டில் குளிர்சாதனப் பெட்டியின் அளவைக் குறைத்து அல்லது அணைத்துவிட்டு உடல் சமநிலை ஆன பிறகு செல்லலாம். வெளியில் இருந்து வந்தால் உடனே குளிர்சாதன அறையில் நுழையாமல் மின்விசிறியின் கீழ் அமர்ந்து உடலைச் சமநிலைப்படுத்திவிட்டு குளிர்சாதன அறையில் நுழைவது நல்லது.

## தற்காப்பு நடவடிக்கைகள்

காலையில் 11 மணியிலிருந்து 2 மணி வரையில் வெயிலில் பயணிப்பதைத் தவிர்க்கவேண்டும். வெயில் நேரத்தில் வெளியில் போகவேண்டிய கட்டாயம் இருந்தால் அவர்கள் தளர்ந்த பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். குடை மிகவும் முக்கியமான ஒன்று. அப்படி இயலாதவர்கள் தொப்பியை அணிந்து செல்வது நல்லது. கண்டிப்பாகத் தண்ணீர் பாட்டிலுடன்தான் செல்லவேண்டும். வியர்வை வெளியேற வெளியேறத் துடைத்துக்கொள்ள ஒரு துண்டு அவசியம்.

## கடும் வெயில் பாதிப்புகள்

சளி, தும்மல், இருமல், நா வறட்சி, தொண்டை வறட்சி என்பதோடு அதிக வெயிலில் வெளியே செல்லும்போது நீர்ச்சத்துக் குறைபாடு காரணமாகக் குறைந்த அளவு தலைச்சுற்றல், படபடப்பு, தலை வலி, சோர்வு, உடல் அசதி ஏற்படும். பிறகு கால்களில் தசைப்பிடிப்பு (Leg cramps), தசை வலி வரவும் வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக வயதானவர்களுக்கு, எடை குறைவானவர்களுக்கு, இணை நோய்கள் உள்ளவர்களுக்கு வெப்பப் பக்கவாதம் (Heat stroke), வலிப்பு போன்ற பாதிப்புகள் வரவும் வாய்ப்பு உள்ளன. அதனால் மேற்கூறப்பட்ட தற்காப்பு நடவடிக்கையோடு வெளியில் செல்வது நல்லது.



## முன்னெச்சரிக்கை நடவடிக்கை

வெளியில் உணவு உட்கொள்வதை முற்றிலும் தவிர்த்து, வெளியில் செல்லும்போது வீட்டிலிருந்தே உணவைக் கொண்டுசெல்வது நல்லது. நறுக்கிய பழத் துண்டுகளை (Cut fruits) உடன் கொண்டு செல்லலாம். இளநீரை வெளியில் வாங்கிக் குடிக்கலாம். ஆனால் பாக்கெட்டில் அடைத்து வைத்த பதநீரையோ, பானங்களையோ உட்கொள்ளக் கூடாது.

குறிப்பாக வெயிலில் அதிக நேரம் பயணிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் நம் மேல் தொடர்ந்து வெயிலின் சூடு பட்டு தோல்களில் தடிப்பு, வீக்கம், சிவத்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படலாம். சன்ஸ்கிரீன் (Sunscreen) களிம்பை முகம், உடலில் பூச வேண்டும். குறிப்பாக எஸ்.பி.எப். 20 மற்றும் 35 வரை உள்ள சன்ஸ்கிரீனை (Sunscreen Lotion SPF) அவரவருக்குத் தகுந்த அளவைக் கண்டறிந்து பயன்படுத்துவது நல்லது.

## வெயிலில் கிடைக்கும் நன்மை

வெயில் நாட்டுக்கும் நமக்கும் நல்லது. வெயில் இல்லாவிட்டால் உலகில் எந்தப் பணியும் நடக்காது. இயற்கைச் சுழற்சி முறையின் விதி வெயில். வெயிலில் இருந்துதான் நமக்கு விட்டமின் D கிடைக்கிறது. காலை 10 மணியிலிருந்து 3 மணி வரையுள்ள வெயிலில் புறஊதாக் கதிர்கள் வாயிலாக நமக்கு விட்டமின் D சத்து கிடைக்கிறது. உடலின் எலும்பு வலிமை, பற்கள் வலிமை மற்றும் முக்கியமாக மூளைச் செயல்பாடுகள் எனப் பலவிதமான உடல் ஆரோக்கியத் தேவைகளுக்கு வைட்டமின் D அத்தியாவசிய தேவை. அதோடு நோய் எதிர்ப்பு மண்டலங்களை வலுப்படுத்துதல் மற்றும் இதயம் சம்பந்தப்பட்ட நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாக்கவும் வைட்டமின் D உதவுகிறது.

அதற்காக அதிக நேரம் வெயிலில் இருக்கமுடியாது அல்லவா. சராசரியாக நமது சின்னச் சின்ன வேலைகளைச் செய்யும்போது வெயில் நம்மேல் படும்படியாக நடந்தாலோ, கிடந்தாலோ போதுமானது. வெயிலே நம்மேல் படாமல் வாழ்வதும் நல்லது அல்ல. வெயின் சூடு உடலில் உறைப்பதற்கு முன் அங்கிருந்து விலகிவிடுவது நல்லது. பருவநிலை மாற்றங்களால் உலக வெப்பமயமாதல் தான் காரணம் என்கிறார்கள். நம்மை நாம்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்போது வெயில் என்ன, எதுவுமே நம்மைப் பாதிக்காது.

– எம். தமிழ்ச்செல்வி







வண்ண வண்ண வகுப்பறை

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
முசிரியம், கொரடாச்சேரி,
திருவாரூர்







வண்ண வண்ண வகுப்பறை



ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பழைய காட்பாடி, வேலூர்









# மகாமசானம்

**- புதுமைப்பித்தன்**

சாயந்தரமாகிவிட்டால், நாகரிகம் என்பது இடித்துக் கொண்டும் இடிபட்டுக் கொண்டும் போகவேண்டிய ரஸ்தா என்பதைக் காட்டும்படியாகப் பட்டணம் மாறி விடுகிறது. அதிலும் தேகத்தின் நரம்பு முடிச்சுப் போல, நாலைந்து பெரிய ரஸ்தாக்களும், டிராம் போகும் ரஸ்தாக்களும் சந்திக்கும் இடமாகிவிட்டாலோ தொந்தரவு சகிக்கவே முடியாது. ஆபிஸிலிருந்து 'எச்சு'ப் போய் வருகிறவர்கள், இருட்டின் கோலாகலத்தை அனுபவிக்க வரும் அலங்கார உடை தரித்தவர்கள். மோட்டாரில் செல்லுவதற்கு இயலாத அவ்வளவு செயலற்ற அலங்கார வேஷ வௌவால்கள் எல்லாம் ஏகமேனியாக, 'எல்லாம் ஒன்றே' என்று காட்டும் தன்மை பெற்றவர்கள் போல் இடித்துத் தள்ளிக்கொண்டு அவரவர் பாதையில் போவார்கள். என்றும் அம்மாதிரியே போய்க்கொண்டிருந்தார்கள்.

'[illegible] போக்குவரத்து' [illegible] நியதி வந்ததிலிருந்து [illegible] கட்டடங்களின் [illegible] கொண்டு [illegible] நாகரிகத்தின் [illegible]. கரையைப் பீறிட்டுக் கொண்டு பாயும் வெள்ளத்தை அணைக்கட்டின்மேல் இருந்து கொண்டு பார்த்தால் எப்படியோ, அப்படி இருக்கும்.

நான் சொல்ல வந்த இடமும் அதுதான். மவுண்ட் ரோட் ரவுண்டானா. மலைப்பழ மாம்பழக் கூடைக்காரிகளின் வரிசை.





அவர்களுக்குப் பின்புறம் எச்சில் மாங்கொட்டையைக் குதப்பித் துப்பிவிட்டு, சீலையில் கையைத் துடைத்துக் கொள்ளும் பெண், கைத்தடியோடு 'சிலுமன்' கொடுத்து உலாவிக்கொண்டிருக்கும் காபூலிவாலா, முகம்மதியப் பிச்சைக்காரன், நொண்டிப் பிச்சைக்காரன், தொழுநோய் பிச்சைக்காரன், ஒரு யுவதி – பாதையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு, நிம்மதியாகச் சீவிச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாள் – அப்புறம் நானாவித, "என்ன சார் ரொம்ப நாளாச்சே", "பஸ் வந்துட்டுது", "ஏறு" என்கிற பேர்வழிகள் எல்லாம். அவசரம், அவசரம், அவசரம்...

அப்பொழுது அவன் ரஸ்தாவின் ஓரத்தில் உள்ள நடைபாதையில் படுத்துச் சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்.

சாவதற்கு நல்ல இடம். சுகமான மர நிழல். வெக்கை தணிந்து அஸ்தமனமாகிவரும் சூரியன். "ஜே ஜே" என்ற ஜன இயக்கம். ராஜ கோலாகலம் என்று தான் சொல்ல வேண்டும்.

அப்பொழுது அவன் செத்துக் கொண்டிருந்தான்; சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்.

ஜனங்கள் அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள்; வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாது; சிலர் தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

ஓவியங்கள்: தமிழ்



அவன் கிழட்டுத் துருக்கப் பிச்சைக்காரன். தாடி மிகவும் நரைத்து விட்டது. மேலே அழுக்குப் பிடித்த கந்தை; கையையும் காலையும், மூப்பு போஷணையின்மை இரண்டும் சேர்ந்து சூம்பவைத்துவிட்டன. கால், காய்த்துப் போன கால்.

அவன் பக்கத்தில் தலைமாட்டில் இன்னும் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்து கொண்டிருந்தான். தகரக் குவளையில் தண்ணீரை எடுத்துக் கிழவனுடைய தலையைத் தூக்கி ஒரு மிடறு தண்ணீர் கொடுக்க முயன்றும் முடியாமையால் வாயை மட்டிலும் நனைத்தான். தன்னுடைய கைகளைத் தலைக்குக் கீழ் கொடுத்துத் தூக்க முயன்றான். படுத்துக் கிடந்த கிழவன், அதாவது செத்துக் கொண்டிருந்த கிழவன், தன் பக்கத்தில் காருண்ய ஸ்தல ஸ்தாபனத்தார் நிறுத்தி வைத்திருந்தார்களே, அந்தத் தகரப் பீப்பாய், அதைப் பிடித்தபடியே தலையை நிமிர்த்த முயன்றான். அவன் கண்களில் ஒளி மங்கி விட்டது. அவன் உதடு நீலம் பூத்துவிட்டது. அவன் கதையெல்லாம் இன்னும் சிறிது நேரத்திற்குள் சம்பூர்ணமாகிவிடும். ஆனாலும் அவன் அந்தத் தகரப் பீப்பாயைப் பிடித்த பிடிப்பை விடவில்லை. பிடிப்பில் ஓர் ஆறுதல் இருந்தது; பலம் இருந்தது. பக்கத்தில் யாரோ தண்ணீர் கொடுக்கிறார்கள் என்ற பிரக்ஞை இருந்ததாக மட்டும் தெரியவில்லை. தண்ணீர் வந்தது; குடிக்க வேண்டும்; அவ்வளவுதான் அவன் மனதில். அதற்குமேல் நினைக்க விருப்பமில்லை; தேவையில்லை; திராணி இல்லை.

அப்போது டிராம் வண்டி ஏறுவதற்காக இரண்டு பேர் வந்தார்கள். இரண்டு பேரும் நின்றார்கள். ஆனால் டிராம் வரவில்லை. இருவரில் ஒருவர் தகப்பனார்; முப்பது வயசு. இரண்டாவது நபர், சிறு பெண் குழந்தை. நாலைந்து வயசு இருக்கும். அவரைப் பார்த்தால் தம் குடும்பத் தேவைகளைத் திருப்தி செய்துகொள்வதற்குக் கஷ்டப்படுபவராகத் தெரியவில்லை. குழந்தை சாதாரணக் குழந்தை; ஆனால், தாய் சிறிதே கவனமுள்ளவள் என்பது தெரியும்படி, சுத்தமாக, படாடோபம் இல்லாமல் அலங்கரித்து விடப்பட்டிருந்தது.

குழந்தையும் தகப்பனாரும் டிராமுக்குக் காத்துக் கொண்டு நின்றார்கள். குழந்தை அவருடைய ஆள்காட்டி விரலைப் பிடித்துக் கொண்டு நின்றது. நின்று கொண்டிருந்தவர்களுக்கு எதிர்ச் சாரியிலுள்ள கூடைக்காரி வைத்திருந்த மாம்பழம் நல்லதாகத் தெரிந்தது.

"குஞ்சு, நீ இங்கேயே நிக்கணும். அப்பா அந்தப் பக்கமாப் போய் ஒனக்கு மாம்பழம் வாங்கிண்டு வருவனாம்" என்றார் அவர்.

"ஆகட்டும்" என்றது குழந்தை.

"ரோட்டிலே இறங்கி வரவே படாது, தெரியுமா? வந்தாப் பழமில்லை" என்றார் அவர். 'குழந்தையைத் தனியே விடக்கூடாது' என்று அவர் மனசு குறுகுறுத்தது.

"இங்கியே நிக்கறேன் அப்பா" என்று கையடித்துக் கொடுப்பது போல அவரை அந்தப் பக்கம் போகும்படித் தூண்டியது குழந்தை.

மாம்பழ வேட்கையில் அவர் குழந்தையைத் தனியாக விட்டுவிட்டு ரஸ்தாவைக் குறுக்காகத் தாண்டி எதிர்ப்புறமாகச் சென்றார்.

குழந்தை தைரியமானது. இதற்கு முன் இவ்வாறு நின்று பழகியது என்றுதான் சொல்ல வேண்டும். முதல் பயத்தில் அப்பாவைத் தொடர்ந்த கண்கள் அப்புறம் பராக்குப் பார்ப்பதில் ஒன்றிவிட்டன.

சிவப்பு மோட்டார் ஒன்று அதன் கண்களைக் கவர, அந்தப் பக்கமாகவே பார்த்துக் கொண்டு நின்றது. அவசரப்பட்ட ஜீவன் ஒன்று குழந்தையைக் கவனிக்காமல் நடந்து போகையில் இடித்துவிட – அதன் மனம் எந்த உலகில் ஓடுகிறதோ – குழந்தை தள்ளாடியது. இடிபடாமல் நிற்பதற்காகச் சிவப்பு மோட்டார் பார்க்கும் ஆசையையும் துறந்து நடைபாதை ஓரத்தில் உள்ள சுவர் அருகில் போய் நின்று கொண்டது. சுவரில் ஒன்றி நின்று சாய்ந்து கொண்டு தன்னுடைய பைக்குள் கை போட்டபடி நாலு திசைகளிலும் சுற்றிப் பார்த்தது.

செத்துக் கொண்டிருக்கும் அக்கிழவனும் அவனுடைய சாவுக்கு உதவி செய்துகொண்டிருக்கும் வேறு ஒருவனும் அதன் கண்ணில்பட, 'அதென்ன வேடிக்கை?' என்று பார்க்கத் தயங்கித் தயங்கி அவர்கள் பக்கம் நெருங்கியது.





'பால் குடிக்க மாட்டேன்' என்றால் அம்மா தன்னை மட்டும் வற்புறுத்தி டம்ளரில் வைத்துக் கொண்டு தன்னிடம் மல்லுக்கட்டி அதைப் புகட்டுவதும், அப்பா, 'வேண்டாம்' என்றால் பேசாதிருந்து விடுவதும் அதற்குத் தெரியும். பெரியவர்களுக்கு 'வேண்டாம்' என்று சொல்ல உரிமையுண்டு; அம்மாவானாலும் அவருக்குப் பயப்படுவாள் என்பது அந்தக் குழந்தையின் சித்தாந்தம். அதற்கு அது வேடிக்கையாக இருந்தது. பெரியவர்களுக்கு டம்ளரில் புகட்டுவதா என்று அதற்கு ஆச்சரியம்.

இந்த வேடிக்கையைப் பார்க்க அந்த இரண்டு அநாதைகளின் அருகில் சென்றது குழந்தை. கிழவனுடைய தலைப் பக்கம் நின்றது.

இளைய பிச்சைக்காரன் மறுமுறையும் கிழவன் தொண்டையை நனைக்க முயன்று கொண்டிருந்தான். அவனுக்குக் கைப்பழக்கம் போதாது. அவன் ஊற்ற முயன்றபோது, ஒன்று அதிகமாக குபுக்கென்று விழுந்து கழுத்தை நனைத்தது; அல்லது தம்ளரிலிருந்து விழவேயில்லை.

கிழவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டு செத்துக் கொண்டிருந்தான்.

குழந்தை நீரைப் பருகுவதற்கு வாயைக் குவிய வைப்பதுபோல வைத்துக் கொண்டு, தன்னுடைய கையில் உள்ள கற்பனை டம்ளரைப் பிடித்தபடி, "மெதுவா, மெதுவா" என்றது.

தண்ணீர் வார்த்தவன் ஏறிட்டுப் பார்த்தான். "அம்மா, நீ இங்கே நிக்கப்படாது; அப்படிப் போயிரம்மா" என்றான்.

"ஏன்?" என்றது குழந்தை.

"இவுரு சாவுறாரு" என்றான் பிச்சைக்காரன்.

"அப்படீன்னா?"

"சாவுறாரு அம்மா, செத்துப்போறாரு" என்று தலையைக் கொளக்கென்று போட்டுக் காண்பித்தான்.

அது குழந்தைக்கு நல்ல வேடிக்கையாகத் தோன்றியது.

"இன்னும் ஒருதரம் அப்படிக் காட்டு" என்றது.

கூட்டம் கூடிவிடக் கூடாது என்ற பயத்தில் பிச்சைக்காரன் வாயைப் பொத்திக் கொண்டு கையை மட்டும் காண்பித்தான்.

கிழவனுடைய தலைமாட்டில் அவனுடைய அந்திமக் கிரியைக்காக என்பதைக் குறிக்க இரண்டு தம்படிகள் போடப்பட்டிருந்தன. அவை

**ஆசிரியர் குறிப்பு – புதுமைப்பித்தன்**

புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாசலம். கடலூர் மாவட்டம் திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தவர். நவீனத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி. நவீனச் சிறுகதை வடிவத்திலும் முக்கியமான முன்னோடி. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், புத்தக விமர்சனங்கள், மொழிபெயர்ப்புக் கதைகள் எனப் பல வகைமைகளில் எழுதி உள்ளார். இன்றைக்கும் கூட சிறுகதைகளின் அளவுகோல் என்று வரும்போது இவர் நினைவுகூரப்படுகிறார். 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இவரது படைப்புகளை நாட்டுடைமை ஆக்கியது.



குழந்தையின் கண்களில் பட்டன.

“பட்டாணி வாங்கிக் குடேன்” என்று படுத்துக் கிடந்தவரைச் சுட்டிக் காட்டியது.

தனக்குப் பிடித்தது மற்றவர்களுக்கும் பிடித்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கை அதற்கு.

எங்கே பெரியவர் யாராகிலும் வந்து தன் மீது மோசடிக் குற்றம் சாட்டப் போகிறார்களோ என்ற பயத்தில் நாலு பக்கமும் சுற்றிப் பார்த்துக் கொண்டு, “ஒங்கிட்டே துட்டு இருக்கா?” என்று கேட்டான் பிச்சைக்காரன்.

“இந்தா, ஒரு புதுத் துட்டு” என்று குழந்தை அவன் வசம் நீட்டியது.

அவன், குழந்தை கொடுத்ததைச் சட்டென்று வாங்கிக் கொண்டான். அது ஒரு புதுத் தம்படி. கோடீசுவரர்கள் அன்னதான சமாஜம் கட்டிப் பசிப்பிணியைப் போக்கிவிட முயலுவதுபோல், கடலில் காயம் கரைத்து வாசனையேற்றிவிட முயலுவதுபோல் குழந்தையும் தானம் செய்துவிட்டது.

பஞ்சடைந்த கண்ணோடு கிழவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டு செத்துக் கொண்டிருந்தான். ஜனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள்; வந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் அவசரமாகப் போய்க்கொண்டிருந்த நபர் ஒருவரின் கையிலிருந்து ஓரணாச் சிதறிக் கீழே விழுந்தது. அது கூட நினைவில்லாமல் அவரும் நடந்து கொண்டு கூட்டத்தில் மறைந்தார். அவ்வளவு அவசரம். உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் அதைக் கவ்வியெடுத்தான். ஒருவரும் பார்க்கவில்லையே என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டான்.

“நீ போம்மா” என்று குழந்தையைப் பார்த்து மீண்டும் ஒரு முறை சொல்லிப் பார்த்தான்.

குழந்தை, “மாட்டேன்” என்று காலைப் பரப்பிக்கொண்டு நின்றது. முகத்தை வலித்து ‘அழகு’ காட்டியது.

“பாவா, கொஞ்சம் பாலு வாங்கியாறேன்” என்று சொல்லிக் கொண்டு இளம் பிச்சைக்காரன் எழுந்து எதிர்ச்சாரி ஓட்டலை நோக்கி நடந்தான்.

இது கிழவன் காதில் படவில்லை. அவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டு செத்துக் கொண்டிருந்தான்.

குழந்தைக்கு அவனை நன்றாகப் பார்க்க முடிந்தது. அருகில் போய் நின்று கொண்டு வேடிக்கை பார்த்தது. இப்பொழுது விரட்டுவதற்குச் ‘சின்னப் பூச்சாண்டி’ இல்லையல்லவா? தனக்குப் பக்கத்தில் குழந்தை நிற்பது கிழவனுக்குப் பிரக்ஞை இல்லாததால் தெரியவில்லை. அவன் ஓட்டைப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவனும் ஒரு பெரிய ‘ஓட்டை ஓடசல்’ ஜந்துதானே! குழந்தைக்கு அவனுடைய மூஞ்சி, தாடி, அவன் வாயைத் திறப்பது எல்லாம் புதுமை. அவனுடைய நீலம் பார்த்த உதட்டில் ஓர், ஈ வந்து உட்கார்ந்தது; இரண்டாவது ஈ வந்து உட்கார்ந்தது; அதை ஓட்ட அவன் வாயைத் திறந்து உதட்டைக் கோணுவது குழந்தைக்கு வேடிக்கையாக இருந்தது. என்ன நினைத்ததோ மெதுவாகப் “பாவா” என்று இளம்பிச்சைக்காரனைப் போலக் கூப்பிட்டுப் பார்த்தது. உள்ளுக்குள் பயம், பூச்சாண்டி எழுந்து உட்கார்ந்து கொள்ளுமோ என்று.

படுத்துக் கிடந்தவன் கண்கள் விரியத் திறந்திருந்தன; கண்ணின் மணியின் மேல் ஓர் ஈ வந்து உட்கார்ந்து...

“என்னடி, அங்கே போய் நிக்கறே; ஒன்னை எங்கெயெல்லாம் பார்க்கிறது?” என்ற ஓர் அதட்டல் கேட்டது. பேரம் தர்க்கமாகி, தம் கணக்குக்குக் கூடைக்காரியை ஒப்புக்கொள்ள வைத்து இரண்டு மாம்பழங்களை வாங்கி வந்தவரின் நியாயமான கோபம் அது.

“இல்லேப்பா, அது பாவாப் பூச்சாண்டி; பாத்துண்டிருந்தேன்” என்றது குழந்தை ஓடி வந்துகொண்டே.

சிலர் மட்டும் ஏறிட்டுப் பார்த்தார்கள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டார் அவர்; அது பழத்தைத் தூக்க முடியாமல் தூக்கி மோந்து, “வாசனையா இருக்கே!” என்று மூக்கருகில் வைத்துத் தேய்த்துக் கொண்டது.

(கலைமகள், டிசம்பர், 1941)







## வண்ண வண்ண வகுப்பறை

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மேல்கவட்டி, உதகை ஒன்றியம், நீலகிரி





ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, பூகானஅள்ளி, பாலக்கோடு ஒன்றியம், தருமபுரி










# சாதித்த சிறப்புக் குழந்தைகள்!

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணம். ஃபாரஸ்ட் ஹில்ஸ் வடக்கு உயர்நிலைப் பள்ளி [Forest Hills Northern High School] மாணவ, மாணவியர் அறிவியல் மையத்திற்கு கல்விச் சுற்றுலா செல்கின்றனர். அங்கு அவர்களுக்குள் வாக்குவாதம் தொடங்கி, சண்டையாக மாறுகிறது. ஆசிரியர் மைக், உதவி ஆசிரியர் ஜோ லேடன் இருவரும் மாணவர்களை அழைத்துக் கொண்டு பள்ளிக்குத் திரும்புகிறார்கள். பேருந்தில் அமைதி நிலவுகிறது. மெதுவாக ஒரு மாணவி வந்து “மேட் பெரிய தவறைச் செய்திருக்கிறான். விண்வெளி மையத்திலிருந்து விளக்கக் கையேடு எடுத்து வந்துவிட்டான்” என்று கூறுகிறாள்.


ஆசிரியர் சிரித்தபடியே, “அது இலவசக் கையேடுதான். எடுத்து வரலாம்” என்று கூறுகிறார். “நீங்க வந்து பாருங்க” என்று அந்தப் பெண் மீண்டும் அழைக்கிறாள். மைக் எழுந்து சென்று பார்க்கிறார். மேட் தன் கையில் நிறைய கையேடுகளை வைத்தபடி சிரிக்கிறான். “மேட், ஒன்றை மட்டும்தான் இலவசமாக எடுக்க வேண்டும். அங்கிருந்த அனைத்தையும் எடுத்து வந்துவிட்டாயே” என்று அவனிடம் இருந்த கையேடுகளை வாங்குகிறார் மைக். அதை ஆளுக்கு ஒன்றாகத் தருகிறார். விண்வெளி முகாம் பற்றிய கையேடு அது.

“நாம் இதற்குப் போகலாமா?” என்று மாணவன் மேட் கேட்கிறான். “போகலாமே” என்று சொன்ன ஆசிரியர் மைக், யோசிக்கத் தொடங்குகிறார். மைக், சிறப்புக் குழந்தைகளுக்கான ஆசிரியர். ஆம், கல்விச் சுற்றுலா சென்றிருந்தவர்கள் சிறப்புக் குழந்தைகள்.

மறுநாள் வகுப்பறையில் மாணவர்களிடையே விண்வெளி மையம் குறித்தே பேச்சு. "எப்போது விண்வெளி முகாமிற்குச் செல்லப் போகிறோம்?" என்று ஆசிரியரிடம் கேட்கிறார்கள்.

மைக், தொலைபேசியில் விண்வெளி முகாமின் உயர் அலுவலரிடம் பேசுகிறார். "இந்த முகாம் மிகவும் நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கானது. சிறப்புக் குழந்தைகளால் இதில் பங்கு பெறவே முடியாது" என்று அலுவலர் கூறுகிறார். எப்படியாவது நம் பிள்ளைகளை முகாமிற்கு அனுப்பியே ஆக வேண்டும் என மைக் முடிவு செய்கிறார்.

என்ன செய்யலாம் என்று மைக் யோசிக்கிறார். மாலையில் பிள்ளைகளை அழைக்கப் பெற்றோர் வருகின்றனர். மேட்டின் அப்பா பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர். இன்று எங்களுக்குக் கூட்டம் இருக்கிறது என்று ஆசிரியரிடம் கூறுகிறார். "கூட்டத்தில் நமது பிள்ளைகள் விண்வெளி முகாமிற்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்துங்கள்" என மைக் கேட்டுக் கொள்கிறார்.




மைக், இரவு முழுதும் யோசித்து அறிவியல் மைய இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதன் நிர்வாகக் குழு உறுப்பினரான அரசியல்வாதி ஒருவருக்கும் கடிதம் எழுதுகிறார். தொடர் முயற்சியின் காரணமாக மைக்கை அழைக்கிறார்கள்.

மைக்கும் ஜோவும் அறிவியல் மையத்துக்குச் செல்கிறார்கள். மைய இயக்குநர் அவர்களை அழைத்துச் சென்று முகாம் செயல்பாடுகளைக் காட்டுகிறார். கடுமையான உடற்பயிற்சிகள், விண்வெளி அறிவியல் வினாடி வினா என அனைத்துச் செயல்பாடுகளையும் காட்டுகிறார்.

"நன்கு படிக்கும் குழந்தைகளாலேயே இவற்றைக் குறித்த நேரத்தில் செய்ய இயலாது. சிறப்புக் குழந்தைகளால் முடியுமா என்று நீங்கள் தான் கூற வேண்டும்" என்று அலுவலர் கேட்கிறார். "எங்கள் மாணவர்களால் முடியும்" என்று மைக் கூறுகிறார்.

பயிற்சி முகாமில் பங்கு பெறக் கட்டணமாக 50,000 டாலர் கட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள். அவ்வளவு பெருந்தொகையை எவ்வாறு திரட்டுவது என்று மைக் யோசிக்கிறார்.

வகுப்பறையில் எப்போதும் விண்வெளி முகாம் குறித்தே பேச்சு. கட்டணத்திற்கு என்ன செய்யலாம் என்று அனைவரும் கலந்துரையாடுகின்றனர். பல்வேறு செயல்பாடுகளால் சிறிது சிறிதாகப் பணம் கிடைக்கிறது. முகாமிற்கான பயிற்சிகளில் தனது மாணவர்களை ஈடுபடுத்துகிறார் மைக். வகுப்பறையில் எதிலும் ஆர்வம் காட்டாத ஸ்காட்டை மாணவர் குழுவுக்குத் தலைவனாக மாற்றுகிறார்.

பர்கர் கடை நடத்தும் ஒரு நல்ல மனிதர் பண உதவி செய்கிறார். மாணவர்கள் முகாமுக்குச் செல்லத் தேவையான பணம் முழுதும் கிடைக்கிறது. முகாம் தொடங்குகிறது.

சிறப்புக் குழந்தைகளோடு ஆசிரியர்களும் இருக்கிறார்கள். வினாடி வினாவில் மேட் அட்டகாசமாகப் பதில் சொல்கிறான். சிறப்புக் குழந்தைகளின் செயல்பாடுகளைக் கண்டு முகாமில் இருப்பவர்கள் வியக்கிறார்கள்.

முகாமின் இறுதி நாள். சில போட்டிகளில் இரண்டாம், மூன்றாம் பரிசுகளை சிறப்புக் குழந்தைகள் குழு பெறுகிறது. சிறந்த குழுத் தலைவருக்கான விருது ஆசிரியர் மைக் நியமித்த ஸ்காட்டிற்கு வழங்கப்படுகிறது. அனைவரும் மகிழ்கின்றனர். விருதுடன் இருந்த ரிப்பனைத் துண்டு துண்டாக வெட்டி ஆளுக்கு ஒன்றாகத் தருகிறான் ஸ்காட்.

இதற்குப் பிறகு விண்வெளி முகாமிற்குச் சிறப்புக் குழந்தைகளை அனுமதிக்க வேண்டும் என அறிவியல் மையத்தில் முடிவு செய்கிறார்கள்.

உண்மைச் சம்பவத்தைத் தழுவி எழுதப்பட்ட 'A Smile as Big as the Moon' என்ற சுயசரிதையை இதே தலைப்பில் திரைப்படமாக்கியுள்ளார் இயக்குநர் ஜேம்ஸ் ஸ்டீவன் சேட்வித். சிறப்புக் குழந்தைகளைச் சரியாகக் கையாண்டால் அவர்களின் திறமைகள் வெளிப்படும் என்பதற்கு 2012ஆம் ஆண்டு வெளியான இப்படம் ஓர் உதாரணம். யூடியுபில் திரைப்படம் கிடைக்கிறது.

– கலகல வகுப்பறை சிவா

படத்தைப் பார்க்க இந்த விரைவுத் துலங்கல் குறியீட்டைப் பயன்படுத்துக.


# மீப்பெரு மௌனச் சொல்



யாருமற்ற வகுப்பறைக்குள்
நுழைந்த தேன்சிட்டு...
மூன்றுமுறை கொத்துகிறது
கரும்பலகையை...
உதிர்ந்த சுண்ணத் துகள்களில்
ஒட்டியிருக்கிறது
நீள்விடுப்பிலிருக்கும் மாணவியின்
மீப்பெரு மௌனச் சொல்.

கரும்பலகையும்
உதிராச் சுண்ணத் துகளும்
தன் வரலாறு கூறுவதை
உன்னிப்பாகக் கேட்கிறாள்
விடுமுறை முடிந்து
முதல் ஆளாய்
புது வகுப்பறைக்குள் நுழைந்த
தனித்த சிறுமி.

வகுப்பு முடிந்து
எல்லோரும் போன பின்



Publisher & Editor: **C. Amuthavalli,** Printer: **B. Rajkumar,** Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.



ஒட்டியிருக்கும் சுண்ணத் துகளில்
'அம்மா' என்றெழுதி
அதன் மீது சாய்கிறாள்
அவளுக்கே தெரியாமல்
அவள் தலை கோதுகிறது
கரும்பலகை.

படிப்பே வராத சிறுமிக்கு
கரும்பலகை
விரித்து வைக்கப்பட்ட பாய்
ஒட்டிய சுண்ணத் துகளைப் போர்த்தி
அவள் கண்ட கனவைத் தான்
சற்றுமுன் அதட்டி எழுப்பியது
அடுத்த பாடவேளை மணி.

நீச்சல் குளமாக நினைத்து
கரும்பலகைக்குள் குதித்தவள்
முகிழ்த்து வருவதற்குள்
முடிந்துவிட்டது
அந்தக் கல்வியாண்டு
அவள் மேனி முழுக்க
செதில்களாகச் சுண்ணத் துகள்கள்.

அவள் எதிர்பார்ப்பது
கரும்பலகையை சாக்லேட்டாக...
கைகளில் திணிக்கப்படுவதோ
எழுத்துகளால் வேய்ந்து தரப்படும்
வெற்றுப் பொட்டலம்.

ஒட்டுமொத்த நிறம் மாறும்படி
சுண்ணத் துகள்களால்
வெள்ளைத்திரை ஆக்குகிறாள்
கரும்பலகையை...
விரும்பிய படம் ஓடுகிறது
அவள் மனத்திரையில்.

கரும்பலகை இல்லாத அறையைக்
கற்பனை செய்கிறாள்
கடைந்தெடுக்கப்பட்ட
கனசதுர பால்கோவா போல
அவ்வளவு தித்திப்பு.

யாருமற்ற வகுப்பறையில்
ஆசிரியராக மாறி
வகுப்பெடுக்கிறாள்
புகைப்படச் சட்டகமாய்
உருமாறுகிறது கரும்பலகை
அலங்காரச் சில்லுகளாய்
உருக்கொள்கின்றன
சுண்ணத் துகள்கள்.

வருகைப் பதிவேட்டில்
தன் பெயருக்கு நேரே
ஒரு நாள் கூட 'இ' வராமல்
பார்த்துக் கொண்டவள் தான்
காலக் கரும்பலகையில்
சுண்ணத் துகளாய்
உதிர்ந்து கொண்டிருக்கிறாள்.



– மா. காளிதாஸ்


முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, பரவை, மதுரை.

**Kanavu Aasiriyar** Monthly Registered with RNI No: **TNTAM/2022/82359.** Postal Regn No: **TN/CH(C)/600/2022-2024**
Licensed to Post Without Prepayment No: **TN/PMG(CCR)/WPP-679/22-24**
Date of publication 1st Day of every month Posted between 1st - 7th June 2024 Posted at Egmore, RMS/ Patrika Channel

**பொது** - செயலி



# வீட்டிலிருந்தே விண்வெளியைப் பார்க்கலாம்!



கோளரங்கம் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீங்கள் அரங்கத்தில் இருந்தபடியே வானியல் அதிசயங்களைப் பார்க்கலாம். சென்னையில் ஒரு கோளரங்கம் உள்ளது. ஆனால் அங்கு செல்லாமலேயே உங்கள் வீட்டில் இல்லை இல்லை.. உங்கள் கைக்குள்ளேயே ஒரு கோளரங்கத்தைப் பார்க்க முடியும் என்றால் வியப்பாக இருக்கிறது அல்லவா? இதனை ஸ்கைமேப் (SkyMap) என்னும் ஒரு செயலி (ஆண்ட்ராய்டு கைபேசியின்) வழியாகப் பார்க்க முடியும்.

நட்சத்திரங்கள், கிரகங்கள், நெபுலாக்கள் (மூடுபனி அல்லது தெளிவற்ற இருண்ட வானம்), விண்மீன் கூட்டங்கள் போன்றவற்றைக் காண இந்தச் செயலி நமக்குப் பயன்படுகிறது.

3டி தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இதில் விண்வெளியின் நுணுக்கங்களைக் காணமுடியும். இரவு நேரத்தில் இச்செயலியை இயக்கி, அதன் வழி வானத்தைப் பார்த்தால் லட்சத்திற்கும் மேற்பட்ட நட்சத்திரங்களின் தொகுப்பைக் காண்பீர்கள்.

இந்தச் செயலிக்குள் நுழைந்தவுடன் நம் இருப்பிடத்திற்கு ஏற்றாற்போல் தானியங்கியாக இடத்தைத் தெரிவு செய்து கொள்கிறது. இதன் வழியாக விண்வெளியைத் துல்லியமாகக் காணமுடியும்.

இப்போது குறிப்பிட்ட ஒரு கோளைத் தேடவேண்டுமெனில் செட்டிங்கில் சென்று தேடுபொறியில் (Search option) நாம் தேட விரும்பும் கோளின் பெயரைக் கொடுத்தால் குறிப்பிட்ட கோள் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்துச் சுட்டிக்காட்டும். கோள் மட்டும் அல்லாது வானில் உள்ள அனைத்து வகையான விண்வெளிப் பொருள்களையும் நம்மால் தேடிப் பார்க்க முடியும்.

**இந்தச் செயலியைத் தரவிறக்கம் செய்ய, இந்த விரைவுத் துலங்கல் குறியீடை வருடுக.**

நாம் இருக்கும் திசைகளை இந்தச் செயலியின் வாயிலாகப் பார்க்கலாம். இச்செயலியில் இருக்கும் இன்னொரு முக்கியமான வசதி, டைம்ட்ராவல் (Time Travel). ஆம், அப்படி ஒரு வசதி, செயலியின் அமைப்புப் (Setting) பக்கத்தில் உள்ளது. அதன் வாயிலாக நாள், நேரம் போன்ற தகவல்களை உள்ளீடு செய்தால், கடந்த காலத்தில் நிகழ்ந்த வானியல் சம்பவங்களையும், எதிர்காலத்தில் நிகழ உள்ளவற்றையும் காணலாம். இந்தச் செயலியைப் பதிவிறக்கி, அதன் செயல்பாடுகளை நீங்கள் அறிந்தபின், உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கும் உங்கள் வகுப்பு மாணாக்கர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்களும் விண்வெளியின் அதிசயங்களை வீட்டிலிருந்தே இரசிக்கட்டும்.

– பானு

கனவு ஆசிரியர்
ஆசிரியர்களே! உங்கள் படைப்புகளும் இடம் பெற வேண்டுமா? எழுதி அனுப்புங்கள்...
ஆசிரியர், 'கனவு ஆசிரியர்', 8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 600 006. மின்னஞ்சல்: kanavuaasiriyar@tnschools.gov.in